

# தமிழீழ விடுதலைப் போராட்டமும் இந்தியாவும்

எஸ். சர்மா



தமிழீழ
விடுதலைப் போராட்டமும்
இந்தியாவும்

எஸ். சர்மா

சுகந்தம் வெளியீடு

தமிழீழ விடுதலைப் போராட்டமும்
இந்தியாவும்

தென்னாசியாவின்
புவிசார் — அரசியல் — இனஅமைவுச் சூழலில்
இலங்கையின் இனப் பிரச்சினையும்
இந்தியாவின் நிலையும்)


உரிமை: ஆசிரியர்

பதிப்பாளர்: சுகந்தம் வெளியீடு
யாழ். பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்

முதற் பதிப்பு: ஆனி, 1985

விலை: ரூபா 4-00


## பதிப்புரை

தமிழ் மக்கள் வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாதவாறு நெருக்கடி நிறைந்துள்ள இந்தக் கால கட்டத்தில் மக்கள் சரியான அரசியல் தெளிவைப் பெற்றிருக்கவேண்டியது இன்றியமையாததாகும். அத்தகைய நூல்கள் எம்மத்தியில் மிக அரிதாகவே வெளிவந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் அரசியல் அறிவையும் கருத்துப் பரிமாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடிய தரமான நூல் வெளியீட்டுத்துறை அவசியமானதாகும். இத்தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் சுகந்தம் என்னும் வெளியீட்டு அமைப்பை ஆரம்பித்துள்ளோம். எமது முதலாவது வெளியீடாக இச்சிறுநூல் அமைகின்றது. சர்வதேச அரசியல், உள்நாட்டு அரசியல், சமுகத்தின் பல்வேறு பிரச்சினைகள், தேவைகள் என்பன தொடர்பான விஞ்ஞான பூர்வமான ஆக்கங்களையும், மற்றும் கலை-இலக்கியப் படைப்புக்களையும் நாம் வரவேற்கிறோம்; அவ்வாறான தரமான ஆக்கங்களை நாம் வெளியிட முயல்வோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்று மிகவும் சிக்கலான நிலைமைக்கு உள்ளாகியுள்ளது. முப்பது வருடங்களிற்கு மேலாக நிகழ்ந்த அகிம்சைப் போராட்டங்களைக் கண்டு சற்றும் அசையாத அரசு கடந்த பத்து ஆண்டு காலத்தில் வளர்ச்சியடைந்துவந்த ஆயுதம் தாங்கிய போராட்டத்தால் நிலைகுலையத் தொடங்கியுள்ளது. எனவே சமரசத்தின் மூலமாகவேனும் தனது ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலைக்கு ஆட்சியாளர் வந்

துள்ளனர். எதிர்த்து எம்மை வெல்லமுடியாத நிலையில் அணைத்துக் கெடு (Kill By Kindness) என்ற, பிரித்தானிய இராஜதந்திரத்தின் அடிப்படையில் இன்று ஆட்சியாளர்கள் சமரச நாடகத்தில் ஈடுபட்டுள்ளனர். இச்சமரசத்தின் பின்னணியென்ன; இச்சமரசத்தில் வல்லரசுகள், இந்தியா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளினது ஆட்சியாளரின் நோக்கங்களும் தேவைகளுமென்ன என்ற விபரங்களை இச்சிறுபிரசுரம் கோடிட்டுக்காட்ட முற்படுகின்றது. தமது நலன்களுக்காக இந்திய ஆட்சியாளர் எமது போராட்டத்தை அடகுவைக்க அனுமதிக்க முடியாதென்பதை இந்நூல் ஆணித்தரமாக எடுத்துக் கூறுகிறது. தென்னிந்திய மக்களின் பேராதரவுடன் முழு இந்திய மக்களினதும் ஆதரவையும் உதவியையும் பெற்று, உலக மக்களின் அனுதாபத்தையும் வென்று நாம் எமது காலில் போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச்செல்லலாம் என்ற கருத்தை, அதற்கான சாத்தியப்பாடுகளைக் காட்டி முழுநம்பிக்கையுடன் எடுத்துக்கூறுகிறது.

பொதுவாக நோக்கும்போது தென்னாசியாவின் புவிசார் அரசியற் சூழ்நிலை இலங்கையின் வரலாற்றுப் போக்கை கணிசமானளவு பாதிக்கக்கூடியது. தென்னிந்தியாவில் வாழும் தமிழருக்கும், இலங்கையில் வாழும் தமிழருக்கும் இடையிலான இனரீதியான (Ethnic) தொடர்பு இப்புவிசார் அரசியற் சூழலிற் செயற்படும்போது இதன் தாக்கம் மேலும் வலுவடையும். எனவே, இலங்கைத் தீவின் எதிர்கால வரலாற்றுப் போக்கையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் விளங்கிக் கொள்வதற்கான அடிப்படை நிபந்தனைகளாக தென்னாசியாவின் புவிசார் அரசியல், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிற் காணப்படும் தமிழரின் இன அமைவு ஆகிய இரு அம்சங்களும் காணப்படுகின்றன. சர்வதேச அரசியல் நிலைமை தென்னாசியாவுடன் தொடர்புபடுவதற்கேற்ப இத்தீவின் பிரச்சினையிலும் அது பிரதிபலிக்கும். ஆயினும், தென்னாசியா என்ற பிராந்திய அடிப்படையில்தான் சர்வதேச அரசியல் உறவும் அமையும்.

எனவே, தென்னாசியரீதியான போக்கில் எமது பிரச்சினை தொடர்பாக இந்தியாவை நாம் நன்றாக நிறையவே பயன்படுத்தலாம். ஆனால் இந்திய ஆளும் வர்க்கம் எம்மைப் பயன்படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. ஆனால் எமது போராட்டம் தொடர்பான இந்திய ஆட்சியாளரின் நிலையை விளங்கிக்கொள்ள அரசியல் அறிவு முக்கியமானதாகும். எமது போராட்டம் தொடர்பான சகல பரிமாணங்களையும் விளங்கிக் கொண்டாலேயே நாம் போராட்டத்தினை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இச்சிறுபிரசுரத்தினை ஆசிரியர் மூன்று பகுதிகளாகப் பிரித்து எழுதியுள்ளார். முதலாவது பகுதியில் இலங்கையின் இனப்பிரச்சினையை ஒட்டி தென்னாசியச் சூழலில் வல்லரசுகளினதும், இந்திய அரசினதும் தேவைகளையும், அவற்றின் பாத்திரங்களையும் ஆராய்கின்றார். இரண்டாவது பகுதியில் ஜே. ஆர். —ராஜீவ் என்போரிற்கிடையேயான உச்சி மகாநாட்டினைப் பற்றியும், அவர்களுக்கிடையேயான அந்தச் சமரச முயற்சிக்கான தேவைகளையும், நோக்கங்களையும் ஆராய்கின்றார். மூன்றாவது பகுதியில் எந்தவொரு சக்தியிடமும் போராட்டத்தைப் பலியிட்டுவிடாது தென்னாசியச் சூழலில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றியில் முடிப்பதற்கான வாய்ப்புக்கள் எவ்வாறு நிலவுகின்றன; அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி ஆராய்கின்றார்.

இப்பிரசுரத்தின் முதலாவது பகுதி 1984 புரட்டாசி - மார்கழி தளிர் இதழில் இலங்கைப் பிரச்சினையும் இந்தியாவின் நிலையும் என்னும் தலைப்பில் வெளியாகியது. தளிரின் முதலாவது பகுதியுடன் மேலும் சில விபரங்கள் சேர்க்கப்பட்டும், அத்துடன் இரண்டாவது

மூன்றாவது பகுதிகள் புதிதாக இணைக்கப்பட்டும் இச் சிறு நூல் வெளிவருகின்றது.


இப்பிரசுரம் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

சுகந்தம் வெளியீடு

யாழ். பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்.
1985 ஆனி 03

* *

அரசுப் பயங்கரவாதிகளினால்
கொல்லப்பட்ட — துன்புறுத்தல்களிற்கு
உள்ளாக்கப்பட்ட
அனைத்துத் தமிழீழ மக்களிற்கும்,
புரட்சிகரப் போராட்டத்தில்
தமது உயிர்களை அர்ப்பணித்த
அனைத்துப் போராளிகளிற்கும்,
இந் நூல்
சமர்ப்பணம்.



வ
ஆப்கானிஸ்தான்
பாகிஸ்தான்
சீனா
நேபாளம்
பூடான்
இந்தியா
பர்மா
தாய்லாந்து
இலங்கை

# இலங்கையின் இனப்பிரச்சினையும் இந்தியா மற்றும் வல்லரசுகளின் நிலைப்பாடும்

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையினையும், இலங்கையில் சிங்கள—பௌத்த மேலாதிக்கவாதத்தினையும் அதற்கு அடிப்படையான பௌத்த நிறுவனத்தையும் பற்றி விளங்கிக்கொள்ளாமல், இலங்கைத் தீவின் எதிர்காலத்தைப் பற்றி விளங்கிக்கொள்ள முடியாது. தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டத்தைச் சரியான பாதையில் திட்டமிட்டு முன்னேற்றிச் செல்வதற்கு இவற்றைப் பற்றி ஆழமாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் இவை அனைத்தையும் இணைத்து விளக்க முற்படும் ஒரு முயற்சியாகவே இக்கட்டுரை அமைகின்றது.

முதலில், தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் நிலைமையினையும், இலங்கைத் தீவு சம்பந்தமான அதன் கொள்கையினையும் நோக்குவோம். பிரித்தானியர் தமது நலனின் பொருட்டு இந்தியாவைப் பாதுகாப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டே இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர். எனவே இந்தியா சுதந்திரமடைந்ததும் எவ்வித போராட்டமும் இல்லாமல் பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறினர். (இலங்கை சுதந்திரமடைந்தது.) இது இந்தியா பொறுத்து இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை விளக்கிநிற்கும் முக்கியமானதோர் உதாரணமாகும். சுதந்திர இந்தியா பாதுகாப்புச் சம்பந்தமாகப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியது. பிரித்தானியர் ஆதிக்கத்தின் கீழ் இந்தியாவின் ஒரு பகுதியாக விளங்கிய பாகிஸ்தான் சுதந்திரத்துடன் இந்தியாவிலிருந்து பிரிந்தது. சுதந்திரம் பெற்ற உடனடியாகவே இந்திய—பாகிஸ்தான் யுத்தம் 1947ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் தோன்றிவிட்டது. இவ்வாறு, இந்தியாவிற்கு வடமேற்கே இந்தியாவிற்குப் பிரச்சினையாகப் பாகிஸ்தான் எனும் அரசு அமைந்துகொண்டது.

மேலும், வரலாற்றில் ஒருபொழுதும் இந்தியாவின் மீது படையெடுப்பு நிகழாத பகுதியாகிய வடகிழக்கிலிருந்து சீனா 1962ஆம் ஆண்டு படையெடுத்தது. பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இந்தியாவிற்குக் கிழக்கே இருந்துவந்த இன்றைய பங்களாதேஷ் (அன்றைய கிழக்குப் பாகிஸ்தான்) பிரதேசமும் கிழக்கே இந்தியாவிற்குப் பிரச்சினையுள்ள ஒரு பிரதேசமாக அமைந்திருந்தது. இப் பகுதியிற் பாகிஸ்தானிய இராணுவத்துடன் இந்தியா ஒரு பெரும் போரில் ஈடுபட்டதென்பது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்ததன் மூலம் இந்தியாவிற்கு இதனாலான நெருக்கடி தணிந்துள்ள போதிலும் இந்தியாவிற்கும் பங்களா



தேஷிற்கும் இடையே எல்லைப்புறப் பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இந்தியாவைச் சூழ இவ்வாறான பிரச்சினைகள் இருக்கும் இத்தகைய நிலையில் இந்தியாவிற்குத் தெற்கே இந்தியாவின் பாதுகாப்புப் பொறுத்து பிரதான மையத்தில் அமைந்திருக்கும் இலங்கை, இந்தியாவிற்கு விரோதமற்ற ஓர் அரசாகத்தான் (இந்தியாவின் செல்வாக்கிற்குட்பட்ட ஓர் அரசாக) அமைந்திருக்க வேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பமாகும். இந்தியாவின் நோக்கு நிலையில், இலங்கை இந்தியாவின் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட ஒரு தீவாகும்.

இதனால் இந்தியா, இலங்கை பொறுத்துத் தனது கொள்கையைப் பின்வருமாறு வகுத்துள்ளது. அதாவது, இந்தியாவிற்குப் பாதகமற்ற போக்கை இலங்கை உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் கடைப்பிடிக்க வேண்டும். இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையுடன் முரண்படாதவாறும், அதேவேளை எந்தவொரு வெளிநாடும் இலங்கையில் தனது செல்வாக்கைச் செலுத்தமுடியாதவாறும் (அது அமெரிக்காவாக இருந்தாலென்ன சோவியத் யூனியனாக இருந்தாலென்ன இந்தியா விரும்பாது.) இலங்கை இருக்கவேண்டும். இவ்வாறு, தனது கட்டுப்பாட்டை மீறாத நாடாக இலங்கையை வைத்திருப்பதற்கு இந்தியா மூன்று விதமான திட்டங்களை வைத்திருக்கின்றது. அவையாவன:

(1) இலங்கையுடன் சுமுக உறவுகளைக் கையாள்வதுடன் இலங்கை அரசுக்கு எத்தகைய உதவிகளைச் செய்தேனும் இந்தியாவின் செல்வாக்குக்குரிய பகுதியாக வைத்திருத்தல். உதாரணமாக 1971ஆம் ஆண்டு ஜனதா விமுக்திப் பெரமுன (ஜே. வி. பி.) ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியில் ஈடுபட்டபோது பதவியிலிருந்த அர

சாங்கத்திற்கு ஆயுத உதவி படை உதவி போன்ற சகல உதவிகளையும் வழங்கி ஜே.வி.பி. யைத் தோற்கடித்தது. இவ்வாறு ஜே. வி. பி.க்கு எதிராக இந்தியா உதவி செய்தமைக்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்று ஜே. வி. பி. உள்நாட்டு ரீதியாக இடதுசாரிக் கொள்கையை உடையதும்; மற்றையது வெளிநாட்டு ரீதியாக இந்திய எதிர்ப்புவாதக் கொள்கையை உடையதுமாகும்.

(2) இலங்கை அரசாங்கத்திற்கு உதவிகளைச் செய்வதன் மூலம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடியாது போனால் இலங்கையிற் பதவியில் இருக்கும் அரசிற்குப் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கி அதன் மூலம் இந்திய அரசிடம் இலங்கை அரசைப் பணியவைத்தல் என்பதாகும். இன்றைய சூழ்நிலையில் (1983-85) இந்தியா இத்தகைய திட்டத்தையே செயலாக்குகின்றது.

(3) இவ்விரண்டு திட்டங்களினாலும் இலங்கையைக் கையாள முடியாது போகும்போது, இலங்கையால் இந்தியாவிற்கு நெருக்கடி முற்றும் பட்சத்தில் படையெடுப்பின் மூலம் இலங்கையைத் தனது சொல்லைக்கேட்க வைப்பது இந்தியாவின் இறுதித் திட்டமாக இருக்கலாம்.

இன்றைய சூழ்நிலையில், தென்னாசியாவில் இந்தியாவின் முதன்மை (தலைமை) என்ற அடிப்படையிலேயே இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை வகுத்துள்ளது. தென்னாசியாவில் அமெரிக்காவைத் தோற்கடித்தல் என்னும் அடிப்படையில் இங்கு இந்தியாவின் முதன்மையை சோவியத் யூனியன் ஏற்றுள்ளது. அதேவேளை வல்லரசுச் சமபலக் கொள்கையைப் பொறுத்து சோவியத்தின் நலன்களைப் பேணக்கூடியவாறு இந்தியா நடந்து கொள்ள வேண்டுமென்பதும் இவ்விரு அரசுகளுக்குமிடையேயுள்ள அடிப்படை விளக்கமாகும். இவற்றின் அடிப்படையில் இலங்கைப் பிரச்சினை பொறுத்து இந்தியாவின் தீர்மானமே சோவியத் யூனியனின் தீர்மானமுமாகும்.



தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவுடன் நேரடியாக மோதி வெற்றியீட்ட முடியாதென்பது அமெரிக்காவிற்கு நன்கு தெரியும். 1971ஆம் ஆண்டு பங்களாதேஷ் பிரச்சினையில் அமெரிக்காவின் ஏழாவது கப்பற்படை வங்காள விரிகுடாவிலிருந்து திரும்பிப் போனமை இதற்குச் சிறந்ததோர் உதாரணமாகும். பங்களாதேஷ் பிரச்சினையில் 1971ஆம் ஆண்டு இந்தியாவுடன் அமெரிக்காவிற்கு ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து ஹென்றி கீஸிங்கரால் வகுக்கப்பட்டு அமெரிக்க அரசால் இந்தியா மீது கைக்கொள்ளப்படும் கொள்கை Benign Neglect Policy என அழைக்கப்படுகின்றது. அதாவது, இந்தியாவுடன் நேரடியாக் கோபதாபம் கொள்ளாமல் சிரித்துப்பேசி உதாசீனம் செய்துகொள்ளுதல் என்பதாகும். இதன்படி இந்தியாவுடன் நேரடியாக முட்டி மோதக்கூடாது என்ற கொள்கை இருந்தபோதிலும், இந்தியாவைச் சூழவுள்ள நாடுகள் மூலமும், அதேவேளை இந்தியாவுக்குள்ளிருக்கும் தனக்குச் சாதகமான சக்திகள் மூலமும் இந்தியாவிற்குத் தலையிடியினை ஏற்படுத்துவது அமெரிக்காவின் கொள்கையாகும்.

இந்தவகையில் 1977ஆம் ஆண்டு இலங்கையில் பதவிக்குவந்த ஐக்கிய தேசியக் கட்சி (ஐ. தே. க.) அரசாங்கம் அமெரிக்கச் சார்பு வெளியுறவுக் கொள்கையைக்

கடைப்பிடித்ததுடன் தனது கதவுகளை மேற்கத்தேச ஏகாதிபத்தியத்திற்குத் திறந்துவிட்டது. இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய வெளியுறவுக் கொள்கையையும், இங்கு அமெரிக்கச் செல்வாக்கு வளர்வதையும் இந்தியா விரும்பவில்லை. இதேவேளை 1970களின் ஆரம்பத்தில் உருப்பெறத் தொடங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டம் ஐ. தே. க. ஆட்சியில் உக்கிரமடையத் தொடங்கியது. தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகக் கொடூரமான இனஒடுக்குமுறை இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் எதிரொலிக்கத் தொடங்கியது.

இத்தகைய சூழ்நிலையில் இலங்கையில் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளின் செல்வாக்கு வளர்ச்சியடைவதைத் தடுப்பதற்கும், இலங்கை அரசு இந்தியாவின் தலைமையை ஏற்க வைப்பதற்கும் ஏற்ற வகையில் இலங்கையில் எழுந்த இனப்பிரச்சினையை இந்தியா கையாளத் தொடங்கியது. இலங்கைத் தீவு இரு அரசுகளாகப் பிரிவதை இந்தியா விரும்பவில்லை. இலங்கைத்தீவு இரு அரசுகளாக இருப்பதைவிட ஓர் அரசாக இருக்க வைத்து அதனைக் கையாள்வதே ஒப்பீட்டு நிலையில் இந்தியாவின் எதிர்கால நலனுக்குச் சாதகமானது; எனவே இந்தியா தமிழீழக் கோரிக்கையை ஆதரிக்காது தமிழ் மக்களின் பிரச்சினையை தனது நலனுக்குகந்த வகையில் ஓரளவு தீர்த்து வைப்பதும், தனது தலைமையை இலங்கை அரசு ஏற்கவைப்பதுமே இந்தியாவின் பிரதான நோக்கமாய் அமைந்தது.

இந்தியா இக்குறிப்பிட்ட நோக்குநிலையில் இருந்து கொண்டு 1983 ஆம் ஆண்டு யூலை மாதம் இலங்கையில் இடம்பெற்ற பாரிய தமிழின ஒழிப்புக் கலவரத்தின் போது இலங்கை அரசுக்கு இந்தியா படை



உதவியாயினும் செய்யலாம் என்னும் அர்த்தத்தில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவிடம் எத்தகைய உதவி உங்களுக்கு வேண்டும் என்று கோரினார். இந்தக் கட்டத்தில் கலவரத்தை அடக்க இலங்கை அரசு இந்தியாவிடம் படை உதவிகளைப் பெற்றிருந்தால் அது இந்தியாவின் தலைமையை இங்கு நிலைநாட்ட இந்தியாவிற்கு உதவியாய் அமைந்திருக்குமென்பது இந்தியாவின் நோக்கமாகும். இலங்கை அரசு இந்தியா கருதியதான அவ்வாறான உதவிகளைக் கேட்காமல் மருந்துவகை மற்றும் அகதிகளை ஏற்றிச் செல்வதற்கான கப்பல் போன்ற உதவிகளையே சாட்டுக்குப் பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தைப் பணியவைப்பதற்கு இந்தியா இரண்டு முக்கிய திட்டங்களை வகுத்துக்கொண்டது ஒன்று, சர்வதேச ரீதியில் இலங்கையைத் தனிமைப்படுத்துதல், மற்றையது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இயக்கங்களை பெருகவைப்பதற்கான அடிப்படை வசதிகளைச் செய்வதன் மூலம் உள்நாட்டு ரீதியில் இலங்கை அரசுக்குப் பெரும் தலையிடியை ஏற்படுத்துவதன் வாயிலாக இலங்கை அரசை இந்தியாவிடம் பணிய வைத்தல் என நம்பலாம். சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப்பட்ட சூழ்நிலையில் ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் பெருகுமாயின் அது இலங்கைக்குப் பெரும் தலையிடியாகவே அமையும். அந்த நெருக்கடியைத் தாங்க முடியாமல் இலங்கை அரசு இந்தியாவிடம் பணியும் என இந்தியா கணிப்பிட்டிருக்கலாம்.

இலங்கையில் இருந்து அமெரிக்கா, பிரித்தானியா

போன்ற நாடுகளைப் பின்வாங்க வைப்பதற்கான நடவடிக்கைகளுள் ஒன்றாகவே மார்கிரட் தட்சருடனும் றீகன் நிர்வாகத்துடனும் இந்தியப் பிரதமராயிருந்த இந்திரா காந்தி கடிதத் தொடர்புகளையும் மற்றும் இராஜரீகத் தொடர்புகளையும் இலங்கை சம்பந்தமாக மேற்கொண்டிருந்தார். பொதுவாக இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக அமெரிக்காவுடன் சுமூகமான நடவடிக்கைகளை கையாள்வதன் மூலம் அமெரிக்காவை இலங்கையில் இருந்து பின்வாங்கும் நடவடிக்கைகளை எடுக்கவைக்க இந்தியா முயற்சிகளைச் செய்து வந்துள்ளது. ராஜீவ் காந்தியின் ஆட்சியின் கீழ் இந்தியாவில் அமெரிக்காவுக்கு சில பச்சை விளக்குகள் தென்படுகின்றன. ராஜதந்திர நோக்கங்களும் பொருளாதாரத் திட்டங்களும் இதற்குக் காரணமாகும். இந்திய-சோவியத் உறவை உடைக்க முடியாது போனாலும் அதற்கு ஓர் ஆப்பு ஆவது வைத்துவிட வேண்டுமென்று அமெரிக்கா விரும்புகிறது. இது ஒரு இலகுவான விடயமல்ல. இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவுடன் மோதி அமெரிக்காவால் வெற்றியீட்ட முடியாதென்பது அமெரிக்காவுக்கு நன்கு தெரியும். அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியாவைக் கருத்திற் கொண்டு இராணுவ ரீதியான பின்வாங்கலை மேற்கொள்ளுமே தவிர பொருளாதார ரீதியான தனது ஏகாதிபத்திய நலன்களைத் தொடர்ந்து இலங்கையிற் பேணும். இந்தவகையில்தான் குறுங்காலச் சமரசம் காணும் நிலை இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்குமிடையே நிலவுகின்றது. குறுங்காலத்தில் இலங்கையைப் பொறுத்து அமெரிக்காவின் இராணுவரீதியான பின்வாங்கல் மட்டுமே இந்தியாவிற்குப் போதும். ஆனால் நீண்டகாலத்தில் இலங்கையைப் பொறுத்து இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்குமிடையே சந்தைப் போட்டி நிலவும். ஆனால் குறுங்காலத்தை மட்டுமே கருத்திலெடுத்தல் தற்போதைய பிரச்சினையை ஆராயப் போதுமானது. (இங்கு குறுங்காலம் எனக் கருதுவது ஐந்து



பத்து வருடங்களையே தவிர, சில மாதங்களையல்ல.) மேலும், மேற்கூறிய வேறு அனுகூலங்களின் அடிப்படையிலும் இலங்கையில் இருந்து அமெரிக்கா சற்றுப் பின்வாங்குவது அதற்குப் புத்திசாலித்தனம் போல் தெரிகின்றது.

பொருளாதாரரீதியில் இந்தியாவில் குறிப்பிடத்தக்களவு வாய்ப்புகள் அமெரிக்காவிற்குத் தென்படுகின்றன என்பதை இங்கு ஆழமாக நோக்கவேண்டும். இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையேயான பலப்போட்டி, அது சம்பந்தமான விஞ்ஞான, தொழில்நுட்பம் என்னும் அம்சங்களைக் கருத்தில் எடுத்தால் இதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம். டெங் சியா- ஓ-பிங் தலைமையிலான சீனா இன்று நான்கு வித நவீனமயமாக்கற் கொள்கையில் ஈடுபட்டுள்ளது. அவையாவன: கைத்தொழில், விவசாயம், விஞ்ஞானம்-தொழில்நுட்பம், பாதுகாப்பு என்னும் நான்கு துறைகளையும நவீனமயமாக்கல் என்பதாகும். இதன்படி இன்னும் பதினைந்து ஆண்டுகளுள் (2000 ஆம் ஆண்டளவில்) இந்தியாவைவிடச் சீனா விஞ்ஞான, தொழில்நுட்பத்தில் மிகவும் மேம்பட்ட நாடாக மாறிவிடும். இதனால் இந்தியாவைவிட அதிகளவு பலத்தைச் சீனா பெற்றுவிடும். இந்தச் சூழ்நிலையில் (வேறு தேவைகளின் அடிப்படையிலும்) இன்று இந்தியா ராஜீவ் தலைமையில் விஞ்ஞான தொழில்நுட்பத்தினையிட்டு ஒரு புதிய தீர்மானத்திற்கு வந்துள்ளது. அதாவது இந்தியாவைக் கொம்பியூட்டர்மயப்படுத்த வேண்டும் எனபதாகும். இதனை நிறைவேற்றும் பட்சத்தில் 2000 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா சீனாவை விடப் பலம்பொருந்திய நாடாகத் தன்னை வைத்துக் கொள்ள முடியும். அதாவது குறைந்தது பத்து வருடங்களாவது சீனாவைவிட இந்தியா முன்னுக்கு நிற்கும்.

இவ்வாறு இந்தியா தன்னைக் கொம்பியூட்டர் மயப்படுத்த வேண்டுமாயின் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகையும் நாடவேண்டும். உண்மையில் இந்தியாவிற்குத் தொழில்நுட்ப சாதனங்களை விற்க அமெரிக்கா விரும்பாது. ஆனால் அவ்வாறு அமெரிக்கா இதில் தனது தொழில்நுட்ப சாதனங்களை விற்க மறுத்தாலும் இந்தியா ஐந்து, பத்து வருடங்கள் பின்போக வேண்டிவருமே தவிர வளர்வதைத் தடுக்கமுடியாது. அதேவேளை அமெரிக்காவிற்கு ஏற்பட்டுவரும் பொருளாதாரப் பிரச்சினைகளின் நிமித்தம் இந்தியா பெரியதொரு சந்தை என்ற வகையில் தனது தொழில்நுட்பக் கருவிகளை இந்தியாவிற்கு விற்பனை செய்வதனால் அமெரிக்காவுக்குத் தற்காலிக சுமைத் தணிவு (Relief) ஏற்படும். இதனை விளக்குவதற்கு நல்லதோர் உதாரணத்தை இங்கு சொல்லலாம். சோவியத் யூனியனுக்கெதிராக பொருளாதாரத் தடைக்கொள்கையை மேற்குலகம் கடைப்பிடித்தபோது வெளிநாட்டு நாணயத்தின் பொருட்டு ஸ்டாலின் சோவியத்தின் MIG ரக யுத்த விமானங்களை ஆக்கிரமிப்புக் கொள்கைமிக்க ஜேர்மனிக்கு விற்பனை செய்தார். இந்த விமான விற்பனையில் ஸ்டாலினுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதனைச் செய்தார். இறுதியாக, சோவியத் யூனியனைத் தாக்குவதற்கு ஹிட்லர் இந்த விமானங்களையே பயன்படுத்தினார். இவ்வாறு சோஷலிஸக் கொள்கை பேசிய சோவியத்தே நெருக்கடி நிலையில் விமான விற்பனைக்கு முன்வந்ததென்றால் அமெரிக்கா தனது தொழில்நுட்ப சாதனங்களை நெருக்கடி நிலையில் விற்க முன்வருமென்பது இயல்பு. எனவே விரும்பியோ, விரும்பாமலோ அமெரிக்கா தனது தொழில்நுட்ப சாதனங்களை இந்தியாவிற்கு விற்க முன்வரும். [ஒருவேளை அமெரிக்கா] விற்க மறுத்தாலும் ஏனைய நேட்டோ (NATO) நாடுகள் விற்பனை செய்வதைத் தடுக்கமுடியாது. ஏனெனில் அந்



நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினை அவ்வாறானது, 'நேட்டோ' நாடுகளின் அழுக்கத்தை (Pressure) தலைமை நாடாகிய அமெரிக்காவால் உதாசீனம் செய்ய முடியாது.] இது முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத ஒரு விதியாகும். இவ்வாறு இத்தொழில்நுட்ப சாதனங்களை இந்தியாவிற்கு விற்க மறுத்தால் அமெரிக்காவில் இது சார்ந்த பல தொழிற்சாலைகள் நெருக்கடிக்குள்ளாகும். அதன் மூலம் ஆட்சியாளரும் நெருக்கடிக்குள்ளாவர்.

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு கைத்தொழிற் பண்டங்கள் வருவதை இந்திய முதலாளித்துவம் ஒருபோதும் அனுமதிக்காது. இதில் விட்டுக்கொடுப்பற்ற சந்தை சம்பந்தமான போட்டி நிலவும். எனவே அடிப்படையில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே மிக அடிப்படையான முரண்பாடு நிலவும். அதேவேளை கைத்தொழிற் பண்டங்களன்றி தொழில்நுட்பக் கருவிகள் இறக்குமதி செய்வதை தனது நீண்டகால நோக்கினடிப்படையில் இந்திய முதலாளித்துவம் தற்காலிகமாக அனுமதிக்கும். அதேவேளை அமெரிக்காவிற்கும் தனது தொழில்நுட்பக் கருவிகளை இந்தியாவிற்கு விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார ரீதியில் சுமைத் தணிவு கிடைக்குமென்பதால் அமெரிக்கா - இந்தியா ஆகிய இரு நாடுகளுக்குமிடையே ஒரு குறிப்பிட்டளவு ஐக்கியம் நிலவும். எனவே, அடிப்படையில் இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்குமிடையே பொதுவான முரண்பாடும் அதேவேளை ஒரு குறிப்பிட்டளவு ஐக்கியமும் நிலவும். இயங்கியலின்படி இத்தகைய முரண்பாடு Unity and Struggle of Opposites என அழைக்கப்படும்.

அதேவேளை இத்தகைய முரண்பாட்டின் அடிப்படையில் சோவியத் யூனியனுடன் இந்தியா தனது

உறவை, குறிப்பாக இராணுவ ரீதியில் வலுப்படுத்துதல் தவிர்க்க முடியாது. சோவியத் யூனியனும் இந்தியாவைக் கைவிட்டால் சோவியத்தின் சமபலக் கொள்கை நிலைமை பாதிக்கப்படும். எனவே, சோவியத்தும் இந்தியாவைக் கைவிட முடியாது. ஆகவே அமெரிக்காவுடனான இந்திய உறவிற் குறிப்பிட்டளவு ஐக்கியம் காணப்படப் போகின்ற போதிலும் இந்திய - சோவியத் உறவில் பாதிப்பேற்படமாட்டாது.

இத்தகைய சூழ்நிலையில் இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவைப் பகைத்துத் தனக்கேற்படக்கூடிய அனுகூலங்களை அமெரிக்கா கெடுத்துக்கொள்ள மாட்டாது. எந்த ஒரு வல்லரசும் இந்தியாவில் தனக்கு ஏற்படக்கூடிய நலனுக்காக இலங்கையை இந்தியாவிற்கு விற்கத் தயாராக இருக்கும் என்ற கருத்தை நாம் கவனத்தில் கொள்ளத் தவறக் கூடாது. இலங்கைப் பிரச்சனை சம்பந்தமாக இன்றைய நிலையில் அரைகுறை அரசியற் தீர்வுக்கு வருவது அமெரிக்காவிற்கு நன்மை அளிக்கக் கூடியது. எனவேதான் இலங்கை அரசை அரைகுறை அரசியற் தீர்வுக்கு வருமாறு அமெரிக்கா வற்புறுத்துகின்றது. பொதுவாகப் பார்க்குமிடத்து இலங்கையைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் இந்தியா வெற்றியினை ஈட்டியுள்ளதென்றே கருதலாம். இந்தியாவின் இரண்டாவது நடவடிக்கை இலங்கை அரசுக்கு உள்நாட்டு ரீதியாக நெருக்கடியை ஏற்படுத்துதல். ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் திடீரெனப் பெருப்பதன் மூலம் இலங்கை அரசு தாங்கமுடியாத நெருக்கடிக்குள்ளாகி இந்தியாவிடம் பணியும் என்பது இந்தியாவின் எதிர்பார்ப்பாகும். ஆயுதம் தாங்கிய இயக்கங்களை விரிவடையவைப்பதில் இந்தியாவிற்கு இரண்டு தந்திரோபாயங்கள் உண்டு. முதலாவது இவ்வியக்கங்களின் விரிவடைவால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாதல். இரண்டாவது இவ்வியக்கங்கள் சோஷலிசத் தமிழீழ அரசை



அமைக்கக் கூடியளவு பலம்பெறுது செய்தல் என்பதாகும். உலகிற் புரட்சி இயக்கங்களை நசுக்குவதற்கு அமெரிக்கா கையாளும் ஒரு முறையைச் சில மாற்றங்களுடன் இந்தியா தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பொறுத்துக் கையாள்கின்றது. அமெரிக்கா கையாளும் முறையை இங்கு நோக்குவோம்.

ஒரு நாட்டில் புரட்சிகர இயக்கம் ஏதும் தோன்றும் போது அதனைத் தோற்கடிப்பதற்குரிய இலகுவான வழியிலொன்று அவ்வியக்கத்தை முதிர்ச்சியற்ற ஒரு வளர்ச்சிக்கு தள்ளுதலாகும். ஓர் இயக்கம் படிப்படியாக நாளாந்த அனுபவங்களுக்கூடாக ஒழுங்காக வளர்வதன் மூலம் அவ்வியக்கம் சரியான பாதையிற் ஸ்திரமடைந்துவிடும். இயக்கத்தை ஸ்திரமாக வளரவிடாமற் தடுப்பதற்குரிய ஒரு வழி இயக்கத்தைக் குழப்பமான முறையில் திடீரென்று வளரவைப்பதாகும். இதற்கான ஒரு வழி இயக்கத்திற்கு திடீரென நிதி உதவி செய்தலும், ஆயுத உதவி செய்தலுமாகும். இயக்கத்தை சிறிது காலம் நீளக்கயிற்றில் ஓடவிடுமாறு அந்நாட்டின் அரசாங்கத்திற்கு அமெரிக்கா ஆலோசனை வழங்கும். மறுபுறம் சி. ஐ. ஏ. ஏதாவது மனித உரிமை நிறுவனம் ஒன்றினூடாக குறிப்பிட்ட இயக்கத்திற்கு நிதி உதவியை வழங்கும். காசு கிடைத்ததும் 50 அங்கத்தவரைக் கொண்டிருந்த இயக்கம் திடீரென 5,000 பேராக மாறும். நிதானமற்ற இத்திடீர் வளர்ச்சி இயக்கத்துக்குள் ஒழுங்கின்மையைக் கொண்டு வரும், குழப்பத்தைக் கொண்டு வரும், கட்டுக்கோப்பைக் குலைக்கும்; இயக்கம் ஸ்திரமடையாது. ஆனால் வீங்கிப் பெருத்திருக்கும் இயக்கம் தான் குழம்பிய நிலையில் குழப்பகரமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும். இதனால் இயக்கம் தானும் குழம்பி மக்களையும் குழப்பும். இத்தகைய சூழ்நிலையில், அரசு இயக்கங்கள் மீது தீவிர நடவடிக்கை

களை மேற்கொண்டால் அவ்வியக்கத்தை குறைந்தது பல வருடங்களாவது பின்தள்ளிவிடுவது சாத்தியப்பட்டுவிடும். சோஷலிசம் என்பது ஒரு சக்தி; அது ஒரு ஒழுங்கமைப்பு; அது ஒரு கட்டுக்கோப்பு. இதனை எதிரி நன்கு விளங்கியிருக்கிறான். எனவேதான் இதற்கு அடிப்படையான ஸ்தாபனக் கட்டுக்கோப்பைக் குலைத்து விடுவதில் எதிரி பாரிய கவனம் செலுத்துகிறான். ''புரட்சிகரச்சூழ்நிலை இருந்துவிட்டால் மட்டும் புரட்சி வந்துவிடாது; அதற்கோர் புரட்சிகர ஸ்தாபனமும் வேண்டும்'' என்ற லெனின் கூற்றை இங்கு கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். புரட்சியாளர்களைவிட எதிரி இதனை நன்றாக விளங்கி வைத்துக்கொண்டு ஸ்தாபனத்தை புரட்சிகரமற்றதாக்குவதில் பல யுக்திகளைக் கையாள்கின்றான்.

அமெரிக்காவின் இத்தந்திரத்தைத்தான் தமிழீழப் போராட்ட இயக்கங்கள் பொறுத்து இந்தியா கையாள்கின்றது. 1983 யூலை தமிழின ஒழிப்புக் கலவரத்தைத் தொடர்ந்து திடீரென இயக்கங்கள் வீங்கிப் பெருப்பதற்கான ஓர் அடிப்படை வசதி ஏற்பட்டது. எந்த ஒரு இயக்கமும் தனிப்பெரும் வளர்ச்சி அடைய முடியாதவாறும் ஒன்றுக்கொன்று ஏறக்குறைய சமமான வளர்ச்சியை அடையக்கூடியதுமான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. ஒன்றுக்கு மேற்பட்ட இயக்கங்களை ஏறக்குறைய சமவளர்ச்சியில் அல்லது ஓர் இயக்கத்தை மற்றைய இயக்கம் குழப்பக் கூடியதான வளர்ச்சியில் வைத்திருத்தல் என்ற வகைகளில் திட்டமிடப்படுவதுண்டு.

இயக்கங்களின் தொகையை எவ்வளவுக்கு அதிகரிக்க முடியுமோ அவ்வளவுக்கு அதிகரிக்க இந்திய அரசு விரும்பும். இயக்கங்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தால்தான் காலகட்டத் தேவைக்கேற்ப இயக்



கங்களிடையே தனக்குச் சாதகமான சேர்வு மாற்றங்களை (Combinational Changes) உருவாக்க இந்திய அரசுக்கு வாய்ப்பாக இருக்கும். எப்படியோ இயக்கங்கள் உறுதியற்ற, கட்டுக்கோப்பற்ற ஸ்தாபனங்களாகவும், அவை இந்தியாவின் மீது சார்ந்திருக்கக் கூடிய ஸ்தாபனங்களாகவும் இருக்க வேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பமாகும்.

இறுதியிலும் இறுதியாக, இயக்கங்களின் போக்கை நிர்ணயிக்க வேண்டியது தானேதான், என்ற முடிவுக்கே இந்தியா வந்துள்ளது. இந்த அர்த்தத்திற் பார்க்கும்போது இயக்கங்களை இந்தியா தனது கையாளாகவே வைத்திருக்க விரும்பும். (இயக்கங்கள் தீர்க்கதரிசனத்துடன் சரிவரத்திட்டமிட்டு நடந்தால் இந்தியாவின் இந்த வலைக்குள் தப்பித் தவறியும் விழாமற் பாதுகாத்துக்கொள்ள முடியும்) இயக்கத்துக்குள் குழப்பம், இயக்கங்கள் இடையேயான பகைமை ஆகிய இரண்டும் போராட்டத்தை ஒட்டு மொத்தமாகக் குழப்பிவிடக் கூடியவை. இலங்கையைப் பொறுத்தவரையில் தனிமைப்படுத்தப்பட்டு வரும் அரசைக் குழப்புவதற்கு குழப்பமான இயக்கங்களே போதுமானதென்பது இந்தியாவின் கணிப்பீடாகும். சுருக்கமாகச் சொல்வதாயின் இந்தியாவின் தேவைக்கேற்ப இலங்கை அரசுக்கு நெருக்கடியைத் தோற்றுவிக்கக் கூடிய வகையில்தான் தமிழீழப் போராட்ட இயக்கங்கள் வளர்ச்சியடைந்திருக்க வேண்டுமே தவிர அவை ஆட்சி அதிகாரத்தைப் பெறக் கூடிய வகையில் வளர்ச்சியடையக் கூடாதென்பதே இந்தியாவின் திட்டமாகும்.

இந்தியாவிற்கு பகை அரசுகளாக உள்ள சீனா, பாகிஸ்தான் போன்ற அரசுகள் இலங்கையிலுள்ள ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு ஆயுத உதவிகளை வழங்கித் தமிழ் மக்களை ஒடுக்க உதவி புரிகின்ற போதிலும்

மேற்குலகில் இலங்கை கணிசமானளவு தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது. பொதுவாக, இலங்கை அரசு உலக அரங்கில் அவமானப்பட்டுள்ளது. எனவே, இலங்கை அரசு இத்தகைய தனிமைப்பட்ட சூழ்நிலையிலும், இயக்கங்களின் வீக்கத்தால் உள்நாட்டில் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் சூழ்நிலையிலும் உருவாகிவந்த ஒரு வகை சந்தர்ப்பத்தின் நிமித்தம் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா சில அரைகுறை அரசியல் தீர்வுக்கு வரமுற்பட்டார். மாகாண சபை என்ற போலித் திட்டத்தை முன்வைத்து அதனையும் நிறைவேற்ற முடியாது போனார்.

1957 ஆம் ஆண்டு பௌத்த பிக்குகளது ஆதரவுடன் பிரதேச சபைகள் திட்டத்தை எதிர்த்து பண்டா — செல்வா ஒப்பந்தத்தைக் கிழிக்க தலைமை தாங்கிய ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் மாகாணசபைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது இலகுவான காரியமல்ல. ஐ. தே. கட்சிக்குள் உள்ள பதவிப் போட்டி, ஐ. தே. கட்சியை வீழ்த்துவதற்கான ஓர் துரும்பாக எதிர்க்கட்சிகள் இனப்பிரச்சனையைப் பயன்படுத்துதல், பௌத்த நிறுவனம் ஆகிய அனைத்தும் இணைந்து ஜே. ஆர். இனது மாகாணசபைத் திட்டத்தைத் தோற்கடித்தன. இனவாதத்தை வளர்க்கத் தலைமை தாங்கிய ஜே. ஆர். இன்று தானே அந்த இனவாதச் சகதிக்குள் சிக்குண்டு தவிக்கின்றார். எதிரி தனது கழுத்திற் தானே சுருக்குப் போட்டுள்ளான் என்பதுதான் இதன் தர்க்கரீதியிலான வளர்ச்சியாகும்.

வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிந்தமை இந்தியாவின் நிலைமையை மேலும் சிக்கலாகியது, அணிசேரா நாடுகளின் தலைமை ஸ்தானத்தில் இருக்கும் இந்தியா தனது சர்வதேச அந்தஸ்தைப் பேணக்கூடிய வகை



யிலேயே இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க விரும்புகின்றது. எனவே வட்டமேசை மாநாடு தோல்வி அடைந்த பின்பும் இலங்கை அரசைத் தன்னிடம் பணியவைத்தல் என்னும் தந்திரோபாயத்தில் நம்பிக்கை வைத்து அதற்கான நடவடிக்கைகளை மேலும் கையாளத் தொடங்கியது.

இத்தகைய சூழ்நிலையில் நாங்கள் சரியான திசையில் செயற்படுவதன் மூலம் எங்களின் எதிர்காலத்தை நாங்களே நிர்ணயிக்கலாம். இந்தியாவின் உதவியைப் பெறலாம். ஆனால் எங்களை நாங்களே நிர்ணயிக்க வேண்டும். தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவிற்கு ஒரு முற்போக்கான பாத்திரமுண்டு. அவற்றை விளங்கி அவற்றிற்கு நாம் ஆதரவளிக்க வேண்டும். அதேவேளை பிற்போக்கான நடவடிக்கைகளுக்குள் நாம் சிக்குண்டு போய்விடக்கூடாது. இதில் சரியான கண்ணோட்டமும் சரியான திட்டமிடலும் இருக்க வேண்டும்.

சகல தடைகளையும் தாண்டி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வெற்றியீட்டுவதற்கான சில சூழ்நிலைகளும் வாய்ப்புகளும் நிலவுகின்றன. இதற்கான ஒரு வேலைத்திட்டத்திற்கே நாங்கள் முதன்மை கொடுக்க வேண்டும். நாம் எதிர்நோக்கும் தடைகளை உடனடியாகத் தாண்டிவிட முடியாது. எமது போராட்டம் சற்று நீளமானது. நாம் நிச்சயமாக இதில் வெற்றியீட்ட முடியும்.

## 2

## ஜே. ஆர். — ராஜீவ் உச்சிமகாநாடும் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையும்

ஜே. ஆர். — ராஜீவ் காந்தி ஆகிய இருவருக்குமிடையிலான உச்சி மகாநாடு பற்றிய அம்சங்களை இப்பகுதியில் ஆராய்வோம்.

வட்டமேசை மகாநாடு தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து இந்தியாவின் நிலை மேலும் சிக்கலானது. ஆயினும் இந்தியாவின் நோக்குநிலையில் இருந்து இலங்கையின் இனப்பிரச்சினையை மிக நுணுக்கமாகக் கையாள வேண்டிய தேவை இந்தியாவிற்கு இருந்தது. பங்களாதேஷின் விடுதலைப் போராட்டத்தில் தான் வகித்த பாத்திரத்தைப் போல தமிழீழ விடுதலைப் போராட்டம் பொறுத்து பாத்திரத்தை வகிக்க இந்தியா விரும்பாது. பங்களாதேஷைப் பொறுத்தவரையில் அதன் சூழ்நிலையும், அதில் இந்தியாவின் தேவையும் வேறு.

பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் அடிப்படைத் தேவைபற்றிய விடயத்தை முதலில் இங்கு விளங்க முற்படுவோம். 1947 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து பிரிந்து பாகிஸ்தான் என்னும் ஓர் அரசு தோன்றியது. இந்தியாவிற்கு வடமேற்கே ஒரு பகுதியும் இந்தியாவிற்கு வடகிழக்கே இன்னொரு பகுதியுமாக இரு பகுதிகளைக் கொண்ட பாகிஸ்தான் உருவாகிற்று. வடமேற்கேயுள்ள பகுதி மேற்குப்பாகிஸ்தான் என்றும், வடகிழக்கேயுள்ள பகுதி கிழக்குப் பாகிஸ்தான் என்றும் அழைக்கப்பட்டன. இக்கிழக்குப் பாகிஸ்தானே பின்பு பங்களாதேஷ் என்னும் ஒரு புதிய அரசாக உருவாகியது.

பாகிஸ்தான் உருவாகிய காலத்திலிருந்தே இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு அரசுகளுக்குமிடையிலும் பகைமையும் உருவாகியது. 1947 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்திய-பாகிஸ்தானிய யுத்தம் உருவாகியது. இதனைத் தொடர்ந்து பலதடவைகள் இரு நாடுகளும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. எனவே பலம் பொருந்திய பாகிஸ்தான் இந்தியாவிற்கு அருகே இருப்பதை இந்தியா விரும்பவில்லை. எனவே இந்தியாவிற்கு இரு மருங்கிலுமுள்ள பாகிஸ்தானின் இருபகுதிகளையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து அவற்றை சிறிய அரசுகளாக்கிவிட வேண்டுமென்பது ஆரம்பத்திலிருந்தே (1947) இந்தியாவின் அடிப்படைத் தீர்மானமாகி விட்டது. பாகிஸ்தானுக்கான மொத்த அந்நியச் செலாவணியில் 80% கிழக்குப் பாகிஸ்தான் ஈட்டிக் கொடுத்ததென்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் கிழக்குப் பாகிஸ்தானை மேற்குப் பாகிஸ்தானிலிருந்து பிரித்து விட்டால் மேற்குப் பாகிஸ்தானின் பொருளாதாரப் பலம் குறையும். அதன்மூலம் வடமேற்கே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருக்கும் பாகிஸ்தானால் வரக்கூடிய ஆபத்தைத் தணிப்பது இலகுவாகும். ஒன்றுபட்ட பாகிஸ்தான் பலமுள்ளதாக இருந்து அது சீனவுடன் சேர்ந்து தொழிற்படும் பட்சத்தில் அது இந்தியாவிற்கு மிகவும் ஆபத்தானதாய் முடியும்.

எனவே, இந்தியாவின் நோக்கில் மேற்குப் பாகிஸ்தானில் இருந்து கிழக்குப் பாகிஸ்தானை (பங்களாதேஷ்) பிரித்து விடுவது இந்தியாவிற்கு அவசியமானது. எனவே, மேற்குப் பாகிஸ்தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானைப் பிரித்து விடுவதற்கான தக்க தருணத்தை இந்தியா எதிர்பார்த்துக் கொண்டிருந்தது படிப்படியாக மேற்குப் பாகிஸ்தான் ஆட்சியாளரால் வங்காளிகள் (கிழக்குப் பாகிஸ்தான்) மீது மேற்கொள்ளப்பட்டுவந்த ஒடுக்குமுறைகள் 1971 ஆம் ஆண்டு உச்சக்கட்டத்தை அடையவே (1971 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதியிலிருந்து 1971 டிசம்பர் மாதம் வரை மட்டும் 30 லட்சத்திற்கு மேற்பட்ட வங்காளிகள் கொல்லப்பட்டனர். ஒரு கோடிக்கும் மேலான வங்காளிகள் இந்தியாவுக்குள் அகதிகளாய் நுழைந்தனர். ஒரு முகாமில் மட்டும் முப்பதினாயிரம் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டு நிர்வாணமாய் விடப்பட்டிருந்தனர்.) அதனைத் தக்க சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி இந்தியா நேரடி இராணுவ நடவடிக்கையின் மூலம் கிழக்குப் பாகிஸ்தானை மேற்குப் பாகிஸ்தானிலிருந்து விடுவித்து பங்களாதேஷ் என்னும் ஓர் அரசை உருவாக்கியது. இதில் பாகிஸ்தானிலிருந்து பிரிந்து பங்களாதேஷ் தனி அரசாய் உருவாக வேண்டுமென்பது இந்தியாவின் அடிப்படைத் தேவை. பிரதானமாக அந்த அத்தியாவசியமான தேவையின் நிமித்தமாக இந்தியா தனது நேரடி இராணுவ நடவடிக்கையின் மூலம் நாட்டைப் பிரித்து வைத்தது. பங்களாதேஷ் மக்கள் தாம் படிப்படியாக கெரில்லா நடவடிக்கைகள் மூலம் முதிர்ச்சியடைந்து தமது சொந்த இராணுவத்தைக் கட்டிவளர்த்து அதன் மூலம் விடுதலை அடைவதற்கான உதவியை இந்தியா செய்யவில்லை. இடதுசாரிச் சண்முகட்டத்துடன் தீவிரமான கெரில்லாபோராட்ட இயக்கங்கள் வளர்ச்சியடைவதற்கான சூழ்நிலை தோன்றிக் கொண்டுவரவே அவ்வாறான ஸ்தாபனங்கள், போர்முறைகள் வளர்ச்சியடையமுதல் இந்தியா இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் பங்களாதேஷை ஒரு வலதுசாரி அரசாக, பலவீனமான அரசாக உருவாக்கலாம். எனவே இரண்டு தேவைகளின் நிமித்தம் பங்களாதேஷை உருவாக்குவதற்கான இராணுவ நடவடிக்கையில் இந்தியா ஈடுபட்டது. ஒன்று, பாகிஸ்தானைப் பலவீனப்படுத்துவதற்கு பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் தனியே பிரியவேண்டுமென்பது; இரண்டு, அவ்வாறு உருவாகும் பங்களாதேஷ் பலவீனமுள்ளதாயும் அதேவேளை ஒரு வலதுசாரி அரசாகவும் இருக்கவேண்டுமென்பது.

இந்தவகையில் இந்தியாவின் நோக்குநிலையில் இருந்து பார்க்கும்போது பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்திலிருந்து தமிழீழ விடுதலைப் போராட்டம் வேறானது. இலங்கை இரு அரசுகளாகப் பிரிவதை இந்தியா விரும்பவில்லை. அவ்வாறான ஒரு தேவை இலங்கை பொறுத்து இந்தியாவிற்கு இல்லை. எனவே இலங்கையில் உள்ள இனப்பிரச்சினையை சமரசம் செய்து வைத்து இலங்கையைத் தனது செல்வாக்கிற்குட்பட்ட நாடாக வைத்திருப்பது மட்டுமே இந்தியாவிற்குப் போதுமானது.

வட்டமேசை மகாநாடு தோல்வியில் முடிந்தும் இந்தியாவின் நிலை சற்று சிக்கலடைந்தபோதிலும் இந்தியா தனது தேவையை நன்குணர்ந்து, தனது நிலையில் உறுதியாக நின்றுகொண்டு தனது தேவைக்கேற்ப இலங்கை அரசைத் தன்னிடம் பணிய வைப்பதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது.

1985 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே தென்னிலங்கையிற் சில துரித அரசியல் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பொருளாதாரரீதியான பிரச்

சினைகள், ஐ. தே. கட்சிக்குள்ளான பிரச்சினைகள் என்பன ஒருபுறமாக அமைய, எதிர்க்கட்சிகளாலான பிரச்சினைகள், பௌத்தமத நிறுவனங்களாலான பிரச்சினைகள் என்பன இன்னொருபுறமாக அமைய, தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுவகைப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகள் என்பன மறுபுறமாக அமைந்து, கூட்டு மொத்தமாக நெருக்கடிகள் வளரவே, அதன் நிமித்தம் சதி அல்லது ஆட்சிக் கவிழ்ப்புக்கான சூழ்நிலைகள் கூர்மையடைந்தன. தென்பகுதி அரசியலில் ஸ்திரமின்மையும் கொந்தளிப்பும் உருவாகியிருக்கின்றன. இத்தகைய பின்னணியில் ஜே. ஆர். உடைய ஆட்சி எந்த நேரத்திலும் கவிழ்க்கப்படுவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, ஜே. ஆர். தனது ஆதிக்கத்தைப் பாதுகாக்க இனப்பிரச்சினையைச் சமரசம் செய்து நெருக்கடிகளைத் தணிக்க வேண்டியுள்ளது. தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான பல்வேறு தாக்குதல்களும் பௌத்த மத நிறுவனங்கள் மத்தியிலும், மேலும் அரசியற் சக்திகள் மத்தியிலும் ஓர் அரைகுறைச் சமரசத்திற்கான மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடாத்துமாறு கோரிக்கைகள் எழுந்தன. இந்த மனமாற்றத்தையும் கோரிக்கைகளையும் பயன்படுத்திக் கொண்டு தனது முழுச்சிக்கல்களையும் ஜே. ஆர். இந்தியாவிடம் எடுத்துரைத்து இந்தியாவிடம் சரணடையும் நிலைதான் தற்போதுள்ள சமரசப் பேச்சுவார்த்தையின் அர்த்தமாகும்.

ஜே. ஆர். தனது சமரசத்திட்டம் பொறுத்து பல நீண்டகாலத் திட்டங்களைக் கொண்டிருக்கின்றார். தமிழ் மக்களின் பிரச்சினையை அரைகுறையாக ஆவது தீர்த்து வைக்காமல் ஜே. ஆர். ஆல் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கமுடியாத நிலை வளர்ந்துள்ளது. அவ்வாறு அரைகுறையாகத் தீர்த்து தமிழ் மக்களுடனான பிரச்சினையில் சமரசம் காணப்பட்டாலும் நாட்டில் உருவாகி



யுள்ள அரசியற் பொருளாதாரப் பிரச்சினைகளின் நிமித்தம் தென்பகுதியில் ஓர் ஆயுதப் போராட்டம் தோற்றம் பெறக்கூடிய சூழ்நிலை வளர்ந்திருக்கின்றது. வடபகுதியிற் தோற்றம் பெற்றுள்ள ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் தென்பகுதியில் ஓர் ஆயுதப் போராட்டம் தோற்றம் பெறுவதற்கான மனப்பாங்கையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே அவ்வாறு எழக்கூடிய பிரச்சினையைச் சமாளிப்பதற்கான ஓர் அத்திவாரத்தையும் ஜே. ஆர். இடவேண்டியுள்ளது. இந்தவகையில்தான் "இலங்கையும் இந்தியாவும் இணைந்த கூட்டான 'பயங்கரவாதத்' தடை நடவடிக்கை" என்று ஜே. ஆர். முன்வைக்கும் திட்டத்தின் அர்த்தமாகும். இலங்கை ஆட்சியாளரும் இந்திய ஆட்சியாளரும் ஒன்று சேர்ந்து விட்டால் இலங்கையில் எழக்கூடிய எந்தவொரு புரட்சி நடவடிக்கையையும் ஒடுக்குவது இலகுவானது.

இவ்வாண்டின் முற்பகுதியில் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட ஜே. ஆர். அங்கு நின்றுகொண்டு காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாக முழக்கமிட்டார். இவ்வாறு இந்தியாவை ஆத்திரமூட்டும் வகையிற் பேசிய ஜே. ஆர். இந்தியாவிடம் சரணடைய வேண்டிய அளவிற்கு ஜே. ஆர். இனது பிரச்சினையும், முதலாளித்துவ ஆட்சிக்கான தேவையும் அமைந்துகொண்டன. தென்னாசியாவில் முதலாளித்துவ ஆட்சிமுறை நிலவுவதற்கு இத்தகைய சமரசம் அவசியமானது. எனவேதான் இந்தியாவும் இந்தச் சமரசத்தை ஏற்று இலங்கை அரசுடன் கைகோர்த்து நிற்க விரும்புகிறது.

அமெரிக்கா, இந்தியா, இலங்கை ஆகிய மூன்று நாடுகளினதும் ஆட்சியாளர்களும் இலங்கையில் எழுந்துள்ள இனப்பிரச்சினையைச் சமரசம் செய்ய

வேண்டுமென்ற தேவைக்கு ஒன்ருக வந்துள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணி தனிப்பட்டமுறையில் சக்தியற்ற ஸ்தாபனமாக உள்ளது. அது இந்திய ஆட்சியாளரிடம் தன்னை ஒப்படைத்துள்ளது. எனவே, அது இந்திய ஆட்சியாளரின் எண்ணத்திற்கு முரணாக நடக்கமுடியாத ஸ்தாபனமாக உள்ளது. தமிழ் மக்களைப் பெறுத்தவரையில் சில இயக்கங்களால் மேற்கொள்ளபபடும் தவருன நடவடிககைகளால் (உதாரணமாக சேவைத்துறைகளில் கொள்ளையடித்தல், ஸ்தம்பிக்கச் செய்தல் போன்ற நடவடிக்கைகளால்) போராட்டத்தில் மக்கள் விரக்தியுற்று சமரசத் தீர்வுக்கு ஆதரவளிக்கும் போக்கு ஆங்காங்கே தென்படுகின்றது. இவ்வாறு எல்லா வழிகளாலும் சமரசத்திற்கான சூழ்நிலை கனிந்துள்ளது. எனவே, இயக்கங்கள் பொய்ச் சமரசத்துக்குள் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ பலியாகிவிடாது முன்யோசனையுடனும் தீர்க்கதரிசனத்துடனும் நடந்து கொள்வதன் மூலம் நீண்டகால நோக்கிற் போராட்டத்தை முன்னேற்ற வேண்டும்.

ஜே.ஆர். தனது ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையாகத்தான் இந்தச் சமரசத்தை முன் வைக்கிருர். பிரச்சினையின் தர்க்கரீதியான வளர்ச்சியின்படி இதனைச் சமாதான வழியிற் தீர்த்துவைக்க முடியாதென்பது ஜே. ஆர்.க்கு நன்கு தெரியும். இந்திய ஆட்சியளாருக்கும் இது நன்கு தெரியும். ஜே. ஆரைப் பொறுத்த வரையிற் பிரச்சினையைத் தீர்ப்பதல்ல நோக்கம்; பிரச்சினையைப் பின்போடுவதுதான் நோக்கம். பிரச்சினையைத் தீர்ப்பதல்ல; அதனைத் தற்காலிகமாக தணிப்பது இந்திய ஆட்சியாளரைப் பொறுத்தவரையில் இலங்கை அரசு தென்னுசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் தலைமையை ஏற்று இந்தியாவிற்கு பணிந்துவிட்டால், அதன் பின்பு தமிழரின் பிரச்சினையைத் தணித்து அதனைச் சிறிதுகாலம் இழுத்தடிக்கக்கூடியதாய் அமைந்துவிட்டால் அது இந்திய ஆட்சியாளருக்குத் தற்காலிகமாகப் போதுமானதாகும். எனவேதான் இலங்கை—இந்திய ஆட்சியாளர்கள் இணைந்த இந்தச் சமரசம் மிகவும் அபாயகரமானது. இந்தச் சமரசத்தின் பின்னல் வல்லரசுகளும் நிற்கின்றன. இந்தச் சமரச முயற்சி மனித குல வரலாற்று வளர்ச்சியைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்டது.

இலங்கை அரசு இந்தியாவிடம் பணிந்துள்ள இத்தகைய சூழ்நிலையில் இந்திய ஆட்சியாளர் பின்வருமாறு நடந்துகொள்ளக்கூடும். அதாவது முதலில் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுமாறும் கூட்டணியின் தலைமையில் இயக்கங்களைப் பேச்சுவார்த்தையிற் கலந்து கொள்ளுமாறும் ஜே. ஆர். உடன் ஒத்துழைத்தால் அவரால் காலப்போக்கில் இப்பிரச்சினையை தீர்த்துவைக்க முடியுமென்றும் கோரக் கூடும். முதலில் மாவட்ட சபைகள் இணைந்த மாகாண சபைகளாகி, பின்பு அவையுமிணைந்த மாநில சபைகளாகக்கூட வரலாமென்று சொல்லக்கூடும். பல ஆசைவார்த்தைகளையும் சலுகைகளையும் பொய் வாக்குறுதிகளையும் அளிக்கக்கூடும். முதலாளித்துவ ஆட்சியாளரின் சமரசம் பற்றி லெனின் உடைய கூற்றின் ஒரு பகுதியை இங்கு சுட்டுவது பொருத்தமாக இருக்கும்.

''முதலாளித்துவ அரசாங்கங்கள் உலகளாவிய அனுபவத்திலிருந்து அவை பொதுமக்களை அடக்கி ஆள்வதற்கு இரு வழிகளைக் கையாள்கின்றன. முதலாவது வழி பலாத்காரமாகும். முதலாம் நிக்கலஸ், இராண்டாம் நிக்கலஸ் ஆகிய ரஷ்ய மன்னர்கள் கையாண்ட அலுகோஸ் நடைமுறை

கள், எது - எதனை இந்தப் பலாத்கார வழிமூலம் சாதிக்கலாம், அதன் எல்லை வரம்புகள் எவை என்பதை இரத்தம் தோய்ந்த முறையில் எடுத்துக்காட்டியுள்ளன. ஆனால் இன்னொரு வழியும் இருக்கின்றது. இதனை, ஆங்கில, பிரஞ்ச் முதலாளித்துவ வர்க்கங்களே மிகவும் நேர்த்தியாக வளர்த்தெடுத்துள்ளன. இவர்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்த மாபெரும் புரட்சிகள் மூலமும், வெகுஜனங்களின் புரட்சிகர இயக்கங்களின் மூலமும் பாடத்தைக் கற்றுக்கொண்டனர் இந்த வழி ஏமாற்று வித்தைகளையும் முகஸ்துதிகளையும், அழகான சொற்றொடர்களையும் கையாள்கின்றது. இந்த வழி இலட்சக் கணக்கில் வாக்குறுதிகளை அள்ளி வீசும். ஆனால் கொடுப்பதோ சில எலும்புத் துண்டுகள், சில சலுகைகள். அதேவேளை இன்றியமையாதவற்றை முதலாளித்துவ வர்க்கத்தினர் கைவிடாது தம்வசமே வைத்துக்கொள்வர். (The Task of The Proletariat in our Revolution என்னும் நூலிலிருந்து. அழுத்தம் இந்நூல் ஆசிரியருடையது.)

தொடர்ந்து போராட்டத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாதென்ற நிலை ஆட்சியாளருக்கு ஏற்பட்டதும், ஆட்சியாளருக்குத் தோல்வி நிச்சயம் என்பதற்கான சூழ்நிலை உருவாகியதும் போராட்டத்தைத் தொடர்ந்து வளரவிடாது தடுப்பதற்கும், தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்குமாகச் சில சலுகைகளை வழங்கும் சமரச முடிவுக்கு அரசு வந்துள்ளது. எனவே ஆட்சியாளர் தமக்கு முழுத் தோல்வி ஏற்பட்டுவிடாது தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான ஒரு நடவடிக்கை இச் சமரச முயற்சியின் உள்ளார்ந்த அர்த்தமாகும்.



தீவிரவாதிகள் தாக்குதலை நிறுத்தியதும் நாட்டிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுமென்றும், வீதி, போக்குவரத்து, மீன்பிடி போன்ற தடைச் சட்டங்கள் நீக்கப்பட்டு சிவில் நிர்வாகம் அமுலுக்கு வருமென்றும், கைதான தீவிரவாதிகள் விடுதலைசெய்யப்பட்டும், ஏனைய ''பயங்கரவாதி''களுக்கும் பொதுமன்னிப்பு அளிக்கப்படுமென்றும் இந்தச் சமரசவாதிகள் தமது பட்டியலை நீட்டிக்காட்டுவார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினை மிகவும் அடிப்படையானதும் ஆழமானதுமாகும். இவற்றிற்கு மேலெழுந்தவாரியான தீர்வுகள் எம்மை ஏமாற்றுவதற்கே ஆகும். அண்மைக்காலத்திற் போடப்பட்ட சில ஒடுக்குமுறைச் சட்டங்களை நீக்குவதன்மூலம் எமக்கு ஏதோ உரிமை கிடைத்துவிட்டது என்று அர்த்தமாகாது. நாம எதற்காக எதை எதிர்த்துப் போராடினோமோ அது தீர்க்கப்படவில்லை. எமது போராட்டத்தைத் தடுப்பதற்காகப் போடப்பட்ட சட்டங்களை நீக்குவதன் மூலம் எமது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாக அர்த்தமாகாது. போராட்டத்திற்கான அடிப்படைக் காரணம் தொடப்படாமல் அப்படியேதான் இருக்கின்றது. புதிதாகப் போடப்பட்ட சில ஒடுக்குமுறைகளை நீக்கிவிட்டு சில சலுகைகளை வழங்குவதன்மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்பட்டதான ஒரு மாயையை இன்று உருவாக்க முனைகிறார்கள் சகல தரப்பிலுமுள்ள சமரசவாதிகள். எமக்குச் சமரசம் வேண்டாம். இந்தச் சமரசத்தை ஏற்றுக்கொள்வோமாயின் நீண்டகாலப் போக்கில் நாம் அழிந்துவிடுவோம். எமது தலையில் எத்தகைய சமரசத்தைத் திணிப்பதற்கும் எவருக்கும் உரிமையில்லை.

இந்தியாவின் மத்தியஸ்தத்தை இங்கு ஆராய்வோம். இந்தியா எமக்கு உதவிசெய்யலாமே தவிர எமக்குத் தலைமைதாங்க முடியாது. எமது எதிர்காலத்தை இந்தியா நிர்ணயிக்க கூடாது. நாங்கள் தான் நிர்ணயிக்க வேண்டும். சுயநிர்ணய உரிமை என்பது எங்கள் தலைவிதியை நாங்கள் நிர்ணயிப்பது என்பதுதான்; எங்கள் தலைவிதியை இந்தியா நிர்ணயிப்பதென்பதல்ல. சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் நாம எமது சுயநிர்ணய உரிமையை இந்தியாவிடம் தாரைவார்த்துக் கொடுக்கமுடியாது. எமது சுயநிர்ணய உரிமையை நாம் அடைவதற்கு இந்தியாவிடமிருந்து உதவிபெறலாம் எமக்கு உதவிசெய்யுமாறு நாம இந்தியாவைக் கோர வேண்டும். இந்தியாவை அவ்வாறு நிர்பந்திக்கவும் வேண்டும். இந்தியா எமக்கு உதவிசெய்வதென்பதன் அர்த்தம் தன்னுடைய தேவைக்கேற்றபடி தான் நினைத்த உதவிகளைச் செய்வதென்பதல்ல; எங்களுடைய தேவைக்கேற்ப நாங்கள் கோரும் உதவிகளைத்தான் இந்தியா எமக்குச் செய்யவேண்டும். தனது தேவைக்கேற்ற ''உதவிகளை''ச் செய்வதென்பது, தனது தேவைக்கேற்ப எம்மை நடந்துகொள்ளுமாறு கேட்பதென்பது தான் விரும்பியவாறு எம்மை நடத்துவது என்பதெல்லாம் கூட ஒருவகை ஒடுக்குமுறையேதான்.

பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தின் போது இந்திய இராணுவம் பங்களாதேஷில் நடந்துகொண்ட முறை கவனிக்குரியது. அதுபற்றிய ஒருசில உதாரணங்களை இங்கு அவதானிப்பது பயனுள்ளதாக அமையும். பங்களாதேஷிலுள்ள குல்ணு என்னும் மாவட்டத்திலுள்ள பாகிஸ்தானிய இராணுவ முகாம் இந்தியப் படையின் உதவியுடன் கைப்பற்றப்பட்டது. அப்போது இந்திய அதிகாரிகள் அங்கு கைப்பற்றிய இராணுவ உபகரணங்கள் (ஆயுதங்கள்) அனைத்தையும் இந்தியாவிற்கு அனுப்ப முனைந்தபோது அங்கு



விடுதலை அணிக்குப் பொறுப்பதிகாரியாக இருந்த வங்காளியரான மேஜர் எம்.ஏ. ஜாலில் என்பவர் அவ்வாறு ஆயுதங்களை இந்தியாவிற்கு அனுப்பவேண்டாமென்றும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பங்களாதேஷுக்கு சொந்தமானவை என்றும் கூறித் தடுத்தார். அவ்வாறு தடுத்ததற்காக அந்த ஜாலில் என்னும் அதிகாரியை கைதுசெய்யுமாறு இந்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டபடி கல்கத்தாவிலிருந்து இயங்கிய பங்களாதேஷ் தற்காலிக அரசாங்கம் அவரைக் கைது செய்தது. இந்தியாவினது விருப்பத்தின்படி அவர் ஒரு வருடம் வரை சிறையில் வைக்கப்பட்டிருந்தார். (ஆதாரம்: Lawrence Lifschultz, Bangladesh: The Unfinished Revolution, (1979), ப. 37) இங்கு ஒரு விடுதலைப் போராளி - ஒரு தலைவன் - நியாயமானஒரு கோரிக்கையை விட்டதற்காக இந்திய அரசால் கைதாக்கப்பட்ட இவ்வரலாற்றை எப்படி வர்ணிப்பது?

மேலும் பங்களாதேஷின் சிற்ருகொங் என்னும் இடத்திலுள்ள பாகிஸ்தானின் கடற்படைத்தளத்தை இந்தியக் கடற்படையினர் கைப்பற்றியபோது அங்கிருந்த கடற்படை அதிகாரியின் ஒரு மேசையைத் தவிர மற்றைய அனைத்துப் பொருட்களையும் (தட்டச்சு இயந்திரம் உட்பட) இந்தியக் கடற்படையினர் இந்தியாவிற்கே அனுப்பிவைத்து விட்டனர். இச்செயலுக்குப் பெயர் உதவியல்ல; இதுவும் ஒருவகை ஆக்கிரமிப்புத்தான். வரலாறு தந்த இந்தப் பாடங்களை நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது.

நாம் கோருவதை, எமக்குத் தேவையானவற்றை எமது விருப்பப்படி இந்தியா எமக்கு தந்து உதவிசெய்யலாம். அது இல்லாமல் இந்திய ஆட்சியாளர் தாம் நினைத்தவாறு தமது நலனுக்கேற்ற எந்தவொரு

தீர்வையும் எம்மீது திணிக்கக்கூடாது. எமது சுயநிர்ணய உரிமையை நாம் நிலைநாட்டுவோம். யாரிடமும் எம்மை நாம் அடகுவைக்காமல், அல்லது அடிமைச் சாசனம் எழுதிக் கொடுக்காமல் எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கக்கூடிய, அதனை வென்றெடுக்கக்கூடிய வரலாற்றுச் சூழ்நிலைபோதியளவு இன்னமும் நிலவுகின்றது. அதனைப் பயன்படுத்தி, விஞ்ஞானபூர்வமாகப் போராட்டத்தை வழிநடத்தினால் நாம் இதில் வெற்றியீட்டலாம். அது எமது கையில்தான் உள்ளது. அதற்கேற்ப எங்களை நாங்கள் ஒழுங்குபடுத்துவோமாக. அடுத்து, அதற்கான சூழ்நிலையை ஆராய்வோம்.

OO

# 3

## தமிழீழ விடுதலைப் போராட்டமும் அதனைத் தோற்கடிக்கமுடியாத சூழ்நிலையும்

தென்னாசியப்பிராந்தியச் சூழலில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்திய அரசு எவ்வாறு நடந்து கொள்ளக் கூடுமென்பதை இதுவரை ஆராய்ந்தோம். அடுத்து, தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுதற்கேதுவான வாய்ப்புக்களெவை என்றும் அதனடிப்படையில் எவ்வாறு போராட்டத்தை ஒழுங்கமைக்கலாம் என்பது பற்றியும் ஆராய்வோம்.

இலங்கையின் பெரும்பான்மை மக்கள் சிங்கள மக்கள். ஆனால் தென்னாசியச் சூழலில் தம்மைத் தமிழரு

டன் ஒப்பிடுகையில் தாம் சிறுபான்மையினர் என்ற தாழ்வுச் சிக்கலுக்கு உட்படுகின்றனர். தென்னிந்தியாவிலுள்ள தமிழருடன் இணைந்து இலங்கைத் தமிழரினால் தமது உரிமை பறிக்கப்பட்டுவிடக்கூடுமென்ற அச்சம் சிங்கள மக்களிடையே நிலவுகின்றது. சுயநலமிக்க சிங்கள மேலாதிக்க அரசியல்வாதிகள் தமது அரசியல் இலாபங்களுக்காக இவ்வச்சத்தினைத் தூண்டி மேலும் மேலும் வளர்த்து வந்துள்ளனர். எனவே தமிழ் மக்களுக்கு ஏதாவது உரிமை வழங்குவது சிங்கள மக்களிற்குப் பெரும் அழிவாக அமைந்து விடுமென அஞ்சுகின்றனர். இந்த வகையில் இலங்கையின் இனப்பிரச்சினையை ஆராயும்போது நாம் தென்னாசியச் சூழ்நிலையைக் கைவிட்டு இப்பிரச்சினையினை ஆராய முடியாதென்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது உரிமைகள் மறுக்கப்படுவதற்குத் தென்னாசியச் சூழ்நிலை எவ்வாறு காரணமாக அமைகின்றதோ அதுவே எமது போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கான சாதகமான சூழ்நிலையையும் கொண்டிருக்கிறது. தென்னிந்தியாவைக் காட்டி எமதுரிமை மறுக்கப்படும்போது தென்னிந்தியாவைப் பயன்படுத்தி எமதுரிமை வென்றெடுககப் படவேண்டியதும் தவிர்ககமுடியாதது.

ஒரு குறிப்பிட்ட இனம் ஒரு நாட்டில் ஒடுக்கப்படும்போது வேறு நாடுகளிலுள்ள அதை ஒத்த இனம் ஒடுக்கப்படும் இனத்திற்காக முதலிற் குரலெழுப்புவது இயல்பாகும். பிரித்தானியாவில் ஐரிஷ் மக்கள் மீது ஆங்கிலேயர் இனவொடுக்குமுறைகளைப் புரிந்தபோது அமெரிக்காவில் வாழ்ந்துவந்த ஐரிஷ் இனத்தவர் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அயர்லாந்தின் விடுதலைக்காக உதவியுள்ளார்கள். கனடாவில் பிரஞ்சு இனத்தவர் மீது (கியூபெக்) ஆங்கிலேயர் இன ஒடுக்குமுறைகளைப் புரிந்தபோது அதற்கெதிராகப் பிரஞ்சு தேசம் குரலெழுப்பியது. பலஸ்தீன அராபியருக்கெதிரான ஸியோனிஸ ஒடுக்குமுறையை அரபுநாடு



கள் பலஸ்தீன அராபியருக்கு உதவி புரிகின்றன. இவ்வாறு ஓர் இனத்தின் மீது இன்னோர் இனம் ஒடுக்குமுறையைப் புரியும்போது ஒடுக்குமுறைக்குட்படும் இனத்தை ஒத்த வேறு தேசங்களில் உள்ள இனங்கள் அதற்கெதிராகக் குரலெழுப்புவதும் உதவி புரிவதும் உலகில் சாதாரன நிகழ்ச்சியாகும்.

இந்த வகையில் இலங்கையில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையினை எதிர்த்து தென்னிந்தியா குரலெழுப்புவதும் இயல்பு. அவ்வாறு குரலெழுப்ப வேண்டியதும் அவசியம். அயர்லாந்தின் விடுதலைப் போராட்டத்திற்கு அமெரிக்க ஐரிஷ் இனத்தவரின் உதவி ஒரு பலமான உதவியாக அமைய முடியவில்லை ஏனெனில் புவியியல் ரீதியாக இரண்டும் வேறுபட்ட பிராந்தியங்களில் அமைந்திருந்தன. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற் தென்னிந்தியாவின் உதவி பலமானதாக அமைய முடியும். ஏனெனில் புவியியல் ரீதியாக ஈழத்தமிழ்ப் பிரதேசமும் தென்னிந்தியாவும் ஒரே பிராநதியத்தில் அமைந்திருப்பது மட்டுமன்றி இருபத்தைந்து மைல் கடற்தொலைவில் அருகருகே அமைந்துள்ளன. இந்த வகையில் தென்னிந்தியா தமிழீழப் போராட்டத்திற்கு உதவக் கூடிய ஒரு பின்னணி நிலமாகவும் அமைந்துள்ளது. இத்தகைய வசதியின் மத்தியில் இலங்கையில் உள்ள சிங்கள-பௌத்த இனமேலாதிக்கவாதம் தோற்கடிக்கப்படுவது நிச்சயமானது. ஆனால் தோற்கடிக்கப்படும் இடத்தில் வரக்கூடிய தீர்வு தமிழீழ அரசாக அமையுமென்பது நிச்சயமற்றது. அந்தத் தமிழீழ அரசு சோஷலிச அரசாக அமைக்கப்படுமா என்பது அதைவிடவும் நிச்சயமற்றதாய் உள்ளது. இனவாதம் தோற்கடிக்கப்படும் என்பதற்குரிய அடிப்படையில் பெருமளவு பங்கை தென்னாசியச் சூழ்நிலை தருகிறது ஆனால் தோற்கடிக்கப்படும் இடத்தில் சோஷலிச அரசு அமைக்கப்படுவதற்கான பெரும் பங்கு போராட்

டத்தைச் சரியான முறையில் ஒழுங்கமைப்பதில் தான் தங்கியுள்ளது.

இனவாதத்தைத் தோற்கடித்தல் வரையான பகுதியை அரைப்பகுதியாகக் கொள்வோமானல் சூழ்நிலையின் நிமித்தம் அந்த அரைப்பகுதி இலகுவான பகுதியாகும். தோற்கடிக்கப்படும் இடத்தில் சமஷ்டி அரசு என்ற தீர்வுக்கு போகாமல் சோஷலிசத் தமிழீழம் என்ற நிர்மாணத்தை அமைப்பதை மறு பகுதியாகக் கொள்வோமானல் இந்த மறு அரைப் பகுதி மிகவும் கடினமானது. அந்த கடினத்திற்குக் காரணம் தென்னாசியாவில் காணப்படும் முதலாளித்துவ சூழ்நிலையும், இந்திய மத்திய அரசுமாகும். இனி அவற்றை இங்கு ஆராய்வோம்.

சூழ்நிலையைக் கருத்திலெடுத்து போராட்டத்தை ஆராய்கையில் சூழ்நிலையின் நிமித்தம் தமிழீழப் போராட்டம் எதிரியைத் தோற்கடிக்கக்கூடிய சூழ்நிலையில் இருந்து ஆரம்பமாகிறது. இந்த சூழ்நிலையில் தமிழீழப் போராட்டம் பொறுத்து போராட்ட நடவடிக்கைகளின் கனதியை விட அதனுல் ஏற்படும் பிரபல்யத்தின் கனதி அதிகமானது. போராட்ட நடவடிக்கையின் கனதியை விட அதனுல் ஏற்படும் அரசியல் விளைவின் கனதி அதிகமானது. உதாரணமாகத் தாக்குதல் நடவடிக்கையை எடுத்துக்கொண்டால் அதன் கனதியை விட அதிக கனதியான பிரபல்யமும் அதன் கனதியை விட அதிக கனதியான அசியல் விளைவும் ஏற்பட்டதை விளங்கிக் கொள்ளலாம். இந்தச் சூழ்நிலையில் ஒரு சிறிய தள்ளுத் தள்ளிய உடனேயே வரலாறு நெடுந் தூரம் உருண்டு போய்விடுகிறது. தமிழகம், போராளிகளின் பாதுகாப்புக்கான புகலிடமாக மட்டுமன்றி குரல் கொடுக்கும் நிலமாக, இந்திய வானெலி மற்றும் தொலைத்



தொடர்புச் சாதனங்கள் மூலம் பிரச்சினையைப் பிரபல்யப்படுத்தும் ஒரு தளம் ஆகவும் அமைந்துள்ளது. மேலும் விடுதலைப் போராளிகளின் பல்வேறு நடவடிக்கைகட்குமான ஒரு தளமாகவும் அமைந்துள்ளது. இத்தகைய நிலையில் தமிழகம் என்பது தமிழீழத்திற்கான ஒரு பின்னணி நிலம் ஆக அமைந்திருக்காது விட்டால் போராட்டமென்பது பயபிரா (Biafra) வைப் போல இங்கும் இலகுவாக ஒடுக்கப்பட்டிருக்கக் கூடும். பொதுவாக இந்தியாவிற்குத் தெற்கே இலங்கையின் அமைவிடமும், அதுவும் குறிப்பாக இந்தியாவின் தென்பகுதியிற் தமிழரும், இலங்கையின் வடபகுதியில் தமிழரும் இருப்பதான அந்தப் புவியியல் இன அமைவு போராட்டத்தை மிகவும் இலகுவானதாக்கி விடுகின்றது.

இந்த இலகுவான போக்கின் பிரகாரம் போராட்டம் வளர்ந்து ஒரு தமிழீழ அரசு அமைந்துவிடுமானுல், அதுவும் குறிப்பாக ஒரு சோஷலிச தமிழீழ அரசு அமைந்துவிடுமானுல் தென்னாசியாவிற் காணப்படும் இன, அரசியல் சமூக கட்டுக்கோப்பை (Composition) மாற்றி அமைத்துவிடக் கூடியதாக இப்போராட்டம் அமைந்துவிடும். எனவே, தென்னாசியாவிற் காணப்படும் இன்றைய கட்டுக்கோப்பை பேணத் தவறுவது தென்னாசிய முதலாளித்துவ நலனுக்குப் பாதகமானது தமிழீழ அரசு அமையுமானுல் அது தமிழகத்தில் பின்பு எழுச்சியை உருவாக்கும். அதிற், தமிழீழம் தமிழகத்திற்குப் பின்னணி நிலமாக அமைந்துவிடும். எனவே தமிழீழமல்லாத ஒரு தீர்வை அல்லது தென்னாசியாவின் கட்டுக்கோப்பை பாதிக்கமுடியாத ஒரு தீர்வை இந்திய அரசு ஏற்படுத்த முயலும்போது போராட்டம் மிகக்கடினமான கட்டத்தை அடையும். தென்னாசிய கட்டுக்கோப்பைப் பேணக்கூடிய முதலாவது தீர்வு தமிழ் மக்களிற்கு சமஷ்டி ஆட்சி முறை தான். இலங்கை அரசுடன் ஒத்துழைத்து இலங்கை அரசுடன் சமரசம் செய்து இத்தீர்வைக் கொண்டுவர இந்திய அரசு பெரிதும் விரும்புகிறது. இலங்கை

அரசும் ஓரளவாயினும் சமரசம் செய்ய விரும்புகிற போதிலும் சமரசம் செய்ய முடியாதளவிற்கு இலங்கை அரசு பலவீனமானதாக இருக்கின்றது. இது இந்திய அரசைப் பெரும் சிக்கலுக்குள் மாட்டியுள்ளது. விழுங்கவும் இயலாமல் கக்கவும் இயலாமல் இந்திய அரசு தவிக்கிறது. இந்திய அரசாற் பிரச்சினையைச் சமரசம் செய்ய முடியாத நிலைக்கு வைத்திருப்பதில் இன்று பிரதானமான பங்கை வகிப்பது போராளிகளின் பலமல்ல, இலங்கை அரசின் பலவீனம்தான். நாம் (போராளிகள்) பலவீனமானவர்களாய் இருப்போமானால் பிரச்சினை ஓர் எல்லையைத் தாண்டும்போது இந்திய அரசு போராட்டத்தைச் சுவிகாரமெடுத்துவிடும். நீண்டகாலப் போக்கில் போராட்டத்தின் வெற்றியைக்கூட ஏதோ ஒரு வகையில் இந்திய அரசு தனதாகச் சுவிகாரமெடுத்து அந்தச் சுவிகாரப் பிள்ளைக்கு இடும் பிச்சையில் வாழ வேண்டி ஏற்பட்டுவிடும். போராட்டத்தை இறுதியிலும் இறுதியாகச் சுவிகாரம் எடுப்பதைத்தவிர இந்திய அரசுக்கு எதிர்காலத்தில் வேறு வழியிராது. இந்திய அரசு எம்மைச் சுவீகாரம் எடுக்க முடியாதவாறு வைத்திருக்கும் அடிப்படைப் பலம் எம்மிடம் உண்டு. அது எவ்வாறு என்பதை நோக்குவோம்.

இந்திய அரசின் பலத்தைக் கண்டு நாம் பிரமிக்க வேண்டியதோ அன்றி அஞ்சவேண்டியதோ இல்லை. தமிழக மக்களை இந்திய அரசு ஏமாற்றி எமக்கு ஓர் சமஷ்டி ஆட்சி முறையை ஏதோ ஒரு வகையில்தந்து தமிழக மக்களைத் திருப்திப்படுத்த முடியாத நிலையில் எமது கோரிக்கையோடு தமிழக மக்களை நிற்க வைப்போமானால் அந்தத் தமிழக மக்களின் சக்திகளின் முன்பு இந்திய அரசு பலவீனமானதாய் நிற்கும். எமது திசைக்கு இந்திய அரசு திரும்பவேண்டி வருமேதவிர இந்திய அரசின் திசைக்கு நாங்கள்



திரும்பவேண்டிவராது. எமது கோரிக்கை தமிழீழம்தான் என்றும் அதனை இந்தியா அங்கீகரிக்க வேண்டுமென்றும் தமிழக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய வேண்டும். தமிழீழக் கோரிக்கையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டுமென்று போராட வேண்டும். இந்திய அரசின் அங்கீகாரமே பிரதானமானது. அங்கீகாரமற்ற வெறும் உதவி எம்மை ஏமாற்றும். அங்கீகாரமற்ற ஆயுத உதவிகளை விட அங்கீகாரமே முக்கியமானது. அங்கீகாரமற்ற வெறும் ஆயுத உதவி மட்டும் அமையுமானால் இறுதியிலும் இறுதியாகப் போராட்டத்தை இந்திய அரசாற் சுவிகாரமெடுத்துவிட முடியும். எனவே இன்றைய நிலையிற் பிரதானமாக அங்கீகாரத்திற்காகப் போராடி அங்கீகாரத்துடனான உதவிகளைக் கோரவேண்டும். தமிழகத்தில் வேரூன்றித் தென்னகத்திற்கு விரிவாக்கம் செய்து சாத்தியமானவரை முழு இந்திய மக்களின் கவனத்தையும் கவரவேண்டும். முதலில் தமிழகத்தில் எமது கோரிக்கை தமிழீழம்தான் என்பதை ஆழமாக்கிவிட்டால் இந்தியாவின் ஏனைய பகுதி மக்களின் ஆதரவைப் படிப்படியாகப் பெற்றுவிட முடியும்.

தமிழீழப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்குமாறு போராடுவது எமது போராட்டத்தின் ஒரு பகுதி. அதுவே எமது போராட்டத்தின் பிரதான பகுதி. தமிழீழக் கோரிக்கையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டுமென்று இந்தியாவுக்குள் போராடுவதன் மூலம் இந்திய அரசின் கோபத்திற்கு ஆளாக வேண்டுமென்று அஞ்ச வேண்டியதில்லை. இஸ்ரேல் என்றொரு நாட்டை யூதர் அமைப்பதற்கான போராட்டத்தை நாம் ஏற்று கொள்ளவில்லை. ஆனால் அந்த யூதர்கள் பிரித்தானியாவுக்கெதிராக இஸ்ரேல் என்ற நாட்டுக் கோரிக்கையை அங்கீகரிக்குமாறு கோரிய போராட்ட முறையை இங்கு உதாரணத்திற்காக மட்-

டும் கூறுவது பொருத்தமானது. முதலாம் உலக யுத் தத்தின் ஆரம்பகாலத்தில் யூதர்களுக்கு உதவுவதாக பிரித்தானியா வாக்குறுதியளித்தது. ஆனால் இஸ்ரேல் என்ற ஓர் அரசை அமைப்பதற்குத் தான் அங்கீகாரம் அளிப்பதாக பிரித்தானியா கூறவில்லை. ஆனால் இவ் வாறு உதவி செய்வதாக பிரித்தானியா கூறிய பின் பும் பிரித்தானியாவுக்கெதிராக அங்கீகரிக்குமாறு போராடுவதன் மூலம் ஒப்புக்கொண்ட உதவி கிடைக் காமல் போய்விடுமென்று அச்சம் கொள்ளாமல் தமது அரசமைக்கும் கொள்கையை ஏற்குமாறு பிரித்தானி யாவுக்குள் பிரித்தானிய அரசிற்கெதிராக போராட் டங்களை யூதர்கள் நடத்தினர்கள். இறுதியில் தமது கொள்கையை பிரித்தானியா ஏற்றுக்கொள்ளச் செய் தார்கள். யூதர்களின் இஸ்ரேல் அரசு அமைப்பதற் கான கோரிக்கை பிழையானதாய் இருந்தும் சரியான போராட்ட முறையைக் கையாண்டு தமது எண் ணத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். எனவே சரியான கோரிக்கையை உடைய நாங்கள் சரியான போராட்ட முறையையும் கைக்கொள்ளும் பட்சத்தில் வெற்றி சாத்தியமானது. எனவே இந்திய அரசு தமிழீழக் கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டுமென்று போராடு வதில் அஞ்சவேண்டியதொன்றுமில்லை. தமிழீழக் கோரிக்கையை அங்கீகரிக்குமாறு இந்தியாவிற்கு வெளியிலும் உலக அரங்கிற் பிரச்சாரங்களை மேற் கொள்ளல் வேண்டும். எனவே எமது போராட்டத்தின் பிரதான பகுதி தமிழீழக் கோரிக்கையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டுமென்ற போராட்டமாகும்.

மேலும் இவற்றினைச் சாத்தியமாக்குவதற்கான வழிமுறைகளை நோக்குவோம். சகல இயக்கங்களும் இணைந்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒரு பொதுத் தலைமையை உருவாக்குவதன் மூலம், எதிர் நோக்கும் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கலாம். இந்திய



அரசின் இராஜதந்திரத்தால் போராட்டம் சிர்குலைந்து போகாது பாதுகாக்கலாம். தமிழீழக் கோரிக்கைக்கான அங்கீகாரத்தை உலகரங்கிலெடுத்து குறித்த இலட்சி யத்தை அடையலாம். இயக்கங்களுக்குள் ஜனநாயகம், இயக்கக் கூட்டுக்குள் ஜனநாயகம், பொது தலைமைப்பீடத் துள் ஜனநாயகம் என எங்கும் ஜனநாயகம் நிலவினால் தான் ஜனநாயகரீதியாகத் தீர்மானங்கள் எடுக்கப்பட் டால்தான் சரியான வெற்றியை அடைய முடியும். அல்லது தோல்வியைத்தான் தழுவவேண்டி ஏற்படும்.

உடனடியாக இவ்வாறு ஒரு பொதுத்தலைமையை உருவாக்குவதில் சிக்கல்கள் இருக்குமாயின் உடனடி யான தேவை கருதி ஓர் இடைக்காலத் தீர்வுக்கு வரலாம். ஒரு பொதுவான குரலாக அல்லாமல் தனித் தனி இயக்கங்களாக வெளிநாட்டு அரசுகளுடன் பேச முடியாது. அல்லது அவ்வாறு பேசினாலும் கூட அங்கீ கரிக்க மாட்டார்கள். எனவே ஒரு பொதுக்குரலாக நாம் வெளியே ஒலிக்கவேண்டும். இந்தவொரு அம் சத்தில் எந்தவொரு இயக்கத்திடமும் கொள்கை வேறுபாடு இருக்கமுடியாது. இந்தவொரு அம்சத்தைக் கையாளுவதற்கென ஒரு பொதுக் குழுவை சகல இயக்கங்களும் சேர்ந்து உருவாக்கலாம். அதாவது, வெளிநாட்டு அரசுகளுடனை தொடர்பு, வெளிநாட்டு ஸ்தாபனங்களுடனை தொடர்பு, வெளிநாடுகளிற் பிர சாரம் ஆகிய பணிகளுக்கென சகல இயக்கங்களும் சேர்ந்து ஒரு பொதுக்குழுவை உருவாக்குதல் அவ சியம். இந்திய அரசுடனும் மற்றும் உலக நாடுகளுட னும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான உத்தி யோகபூர்வ குழுவாக இது அமையுமிடத்துப் போராட் டத்திற்கான அங்கீகாரம் பெறுவதற்கான வாசற் கதவு திறந்தது போலாகும்.

இயக்கங்களிடையேயான போட்டியும், பிளவும் தான் இந்திய ஆட்சியாளரிடம் எம்மைச் சரணடைய வைக்கக்கூடியதாய் அமையும். இயக்கங்கள் அனைத்தும் இந்த விடயத்திற் போட்டியை மறந்து, இந்திய ஆட்சியாளரை தாஜாபண்ணித் தமது சொந்த இயக்கப் போட்டிகளுக்காகப் போராட்டத்தை அடகுவைக்காமல் அனைத்து இயக்கங்களும் ஒத்த குரலில் ஒரேமுடிவோடு நின்றால் இந்திய ஆட்சியாளரால் எமக்கெதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கமுடியாது. எமது விருப்பத்தைமீறி எமக்கெதிராக இந்திய ஆட்சியாளர் நடவடிக்கைகளை எடுக்க முற்படும்போது தென்னகம் கெம்பி எழும். அது எங்கள் கைகளிற்தான் தங்கியுள்ளது. எனவே எமக்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலைக்கு இந்திய ஆட்சியாளர் தள்ளப் படுவர்.

தமிழீழ மண்ணில் மக்கள் சோஷலிசத்தை நோக்கிச் சரியான கருத்துத் தெளிவு ஊட்டப்பட்டு ஸ்தாபனமயப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு மக்கள் தெளிவான கண்ணோட்டத்துடன் ஸ்தாபனப்பட்டிருக்கும் போது இந்திய ஆட்சியாளரினால் அரைகுறையான தீர்வைத் திணிக்கமுடியாது போகும்.

தென்னாசியச் சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகவும் புரட்சிகரமானது; தென்னாசிய மக்களின் விடிவுக்கு வழிகாட்டக் கூடியது. தென்னாசியாவின் முன்னுதாரணமிக்க ஓர் அரசாக தமிழீழம் அமைவதன் மூலம் தென்னாசியாவில் சோஷலிசத்திற்கான வளர்ச்சி ஏற்பட வாய்ப்பாக அமையும். தென்னாசியாவில் மற்றைய பகுதிகளில் போராட்டங்கள் தோற்றம் பெற்று இலகுவில் நசுக்கப்பட்டுள்ளன. ஆனால் எமது தமிழீழப் போராட்டத்தை நசுக்க முடியாமைக்கான சூழ்நிலை காணப்படுகிறது. இச் சூழ்



நிலையில் நாம் சரியாகச் செயற்பட்டால் போராட்டம் குறித்த வெற்றியில் முடியும். அரசியற் கட்டுமான நடவடிக்கைகளுக்கே இனி அதிக முக்கியத்துவம் கொடுத்துப் போராட்டத்தை நிர்மாணித்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். தென்னாசியாவிற்கே ஒளி விளக்காய் திகழக்கூடிய வாய்ப்பு எமக்குண்டு. இதில் நாம் வெற்றியீட்டுவதற்குச் சாதகமான சூழ்நிலையே நிலவுகின்றது. இதில் இச் சூழ்நிலையைப் பயன்படுத்தி வெற்றியீட்டத் தவறுவோமாயின் இக்கால கட்டத்தில் வாழ்ந்தோம் என்பதற்காக எம்மனைவரையும் எதிர்காலத் தென்னாசிய வரலாறு இழித்துக் கூறும். இப்போது வெற்றிக்கான பங்கு எமது கையிற்தான் தங்கியுள்ளது. எனவே சிறு சிறு வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் ஐக்கியப்பட்டு உழைத்தால் வெற்றி நிச்சயமானதே.

OOO

## பிற்சேர்க்கை

இப்பிரசுரம் எழுதப்பட்டவேளை, அரசியல்—பொருளாதாரப் போக்கினை மனதில் கொண்டு ஊகத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட சில முடிவுகள், இப்போது நூலினை அச்சிட எடுத்த இடைப்பட்ட மூன்று வார காலத்தினுள் நிதர்சனங்களாகின்றன.

சமரசத்திற்கான முன்நிபந்தனைகள் ஏற்பட்ட 24 மணித்தியாலத்துக்குள் தொடங்கி அரசு பல சலுகைகளை தமிழ் மக்களுக்கு அறிவித்துள்ளது. அவற்றிற் சில நிறைவேற்றப்படலாம். ஆனால், அவற்றை நிறைவேற்றுவதன் நோக்கம் போராடும் மக்களை அவர்களது சரியான பாதையிலிருந்து திசைதிருப்பி ஏமாற்றுவதற்கே. இவ்வாறு அரசு சலுகைகளை அளிக்க முன்வரும் என்பதை முன்பே இந்நூலில் சுட்டிக்காட்டியுள்ளோம். (பக். 25-26)

—24-06-1985

## வரலாறு

* ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் முதன் முதலாக சிறுபான்மை மக்களை எதிர்நோக்கியிருக்கும் கல்வி, குடியேற்றத் திட்டம், மொழி, அரசாங்கத்தில் உத்தியோகம் ஆகிய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்போம் என்று உத்தரவாதம் அளிக்கின்றோம். இதற்காக சகல கட்சிகளின் மகாநாட்டில் எடுக்கும் முடிவைச்செயற்படுத்துவோம்.

(ஐ. தே. கட்சியின் 1977 தேர்தல் விஞ்ஞாபனம்)

* ஏழு ஆண்டுகள் கழித்து, 1984இல் சர்வகட்சி மகாநாடு கூடி ஓராண்டு கால நாடகத்தின் பின் முடிவு......?

## நிகழ்காலம்

### சேவைகள்

* வட பகுதியில் வீதிகள் உடன் திருத்தப்படும்.
* வட மாகாணத்திற்கான சகல ரயில் சேவைகளும் (கொழும்பு-காங்கேசன் துறை, கொழும்பு-தலைமன்னார்) (யாழ்தேவி, இன்ரசிற்றி, மெயில் சேவைகள்) விரைவில் ஆரம்பிக்கப்படும்.
* இலங்கை– இந்திய கப்பல் சேவை ஜூலை 15 இல் மீண்டும் ஆரம்பம்.

### அபிவிருத்தித் திட்டங்கள்

* யாழ். பெரியாஸ்பத்திரிக்கு 2 கோடி 86 லட்ச ரூபாய் செலவில் புதிய ஐந்து மாடிக் கட்டிடம்.
* தமிழ்ப் பகுதிகளில் 7 நீர்ப்பாசனத் திட்டங்கள்.
* யாழ். நன்னீர் ஏரித் திட்டம்.
* தமிழ்ப் பகுதிகளில் களஞ்சியங்கள் அமைக்கப்படும்.
* ட்ராக்டர் வாங்க வங்கிக் கடன் (தமிழ்ப் பகுதிக்கு மட்டும்.)

தான் எதிர்கொள்ள வேண்டிவரும் இன்னொரு பிரச்சினையையும் இந்தியா முன்கூட்டியே உணர்ந்திருந்தது. நீண்டதொரு கெரில்லா யுத்தத்தில் தலைமை முஜிபின் 'அவாமி லீக்' கின் கைகளில் இருந்து அதிதீவிரவாதிகளின் கைகளுக்கு நழுவி விடலாமென இந்தியா அஞ்சியது. ஆரம்ப கட்டத்திலேயே பாகிஸ்தானின் உள்நாட்டுப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என இந்தியா இதயபூர்வமாக விரும்பியது.

— எஸ். எம். கில்
The Discovery fo Bangladesh

India foresaw another problem whieh she would have to face. She feared that in a prolenged guerrilla warfare leadership might slip from Mujib's Awami League to the extrema radicals ... India sincerely desired to have the civil war in Pakistan ended at its early stage

- S. M. Gill
The Discovery of Bangladesh